307

உ

சிவமயம்

ஓம் பரம சற்குரு [illegible]

14 JUL 1924

# ஆனந்த நடன மௌனமணி
# மெஞ்ஞான சுடர்.

[12 காண்டங்கள் அடங்கியது.]

இஃது

சிவகிரி மும்மூர்த்திகள் வாசஞ்செய்யப்பட்ட
புத்தூர் வாசிமலைக் குகையில் வாசஞ் செய்யும்
**மௌனம் அண்ணாமலை சுவாமிகளால்**
இயற்றப்பெற்றது.

**இரண்டாம் பாகம்.**

924. [ அணா 5.

R6
N24.2
171404



சிவகிரி [illegible]ம்மூர்த்தி வாசஞ்செய்யப்பட்ட
புத்தூர் வாசிமலை குகையில் வாசஞ்செய்யும்,
மௌனம் அண்ணாமலை சுவாமிகள்

600 008.
171404
A1-48
333

உ

சிவமயம் குருமநீதி.

சிவகிரி மும்மூர்த்திகள் வாசம் செய்யப்பட்ட

புத்தூர் வாசி.மலைகுகையில் வாசம்பண்ணும்

# மௌனம் அண்ணாமலை சுவாமி

அவர்களால் இயற்றப்பட்ட

நீதி விலாச ஞானத்தை பெரியோர்கள் மறைவாக எழுதினார்கள். இந்த ஞானத்தை உலகத்து ஜனங்கள் எடுத்துச்சாப்பிட திடம்பற்றவில்லை அப்படி இருப்பதா. சோதியாகிய அக்கினி சுடர் சொல்லச்சொல்ல அடியேன் எழுதினேன்.

1. மெஞ்ஞான தீபமணிசுடர்.
2. ஹைகோட்டு பஞ்சாயம்.
3. ஞானிக்கு ஞானி அனுபோக ரகசியம்.
4. பூமாதேவி நாயகனுக்குப் பணிவிடை
5. சூரியன் நமக்கு உபதேசம் சொல்லியது.
6. மனதுக்கு அறிவு ஞானசடலத்தைத் தெரிவிப்பது
7. தன்னுடைய காயாபுரிப்பட்டணச் சிறப்பு.
8. வம்பனுக்குக் கடவுள் தண்டனை. பலவியாதி
9. சாதிசஞ்சல தத்துவக் குறங்கு.
10. சாதி நிச்சயம் நீடூழிகாலம் இருப்பு.
11. அக்கினி வீடு அதுவேயிது.
12. கோலகும்மி கோடானகோடி வாழி வாழி.

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

மௌனம் அண்ணாமலைஸ்வாமிகளால் இயற்றிய

## ஆனந்த நடன மௌனமணி

# மெஞ்ஞான சுடர்.

14 JUL 1924

---

சிவாயஞ் சிவாயஞ் சிவாயம் அருட்
சிவாயஞ் சிவாயஞ் சிவாயம். (சிவா)

காப்பு

மூலத்துதித்த முக்கோணம்—குரு
மூர்த்திதனை மனப்பூர்த்தியதாக
காலைத்துதித்துமே போற்றி—வெளி
கண்டுமதியமிர் துண்டு கொண்டேனே. (சிவா)

அருவுருவாகிய ஜோதி—சுட
ரண்ணாமலையுச்சி வாழ்ந்திடும்நீதி
குருபரன்பாதமே போற்றி—நித்தம்
கோனருளாலே குடியானேன் தோழி (சிவா) (1)

மருமணம்சூடியே என்னை—நித்தம்
மணம்கொண்டிருந்ததும் நீயல்லால்வேறோ
அரசடிநாயகா உன்னை—யானும்
அனுதினம் பணிந்தேனே நீவாவாவென்றே (சிவா) (2)

உலகத்துக்காக மெஞ்ஞானம்—கொஞ்சம்
உரைத்திட்டேன் கேளடி உறுதியுள்ளோரே
கலகத்தை கைக்கொள்ளவேண்டாம்—நீயும்
கண்டறிந்து கொள்ளும் காயச்சடமே (சிவா) (3)

அரஞ்செட்டு கோபமேவேண்டாம்—உன்னை
அடித்திட்டபேருக்கு ஆனந்தம் பண்ணு
அரசடிநாயகன் நமக்கு—வந்து
அரனேச சேர்ப்பானே வாங்கடிமானே (சிவா) (4)

குருபரன் பாதமே இதுதான்—என்னை
கொண்ட கணவனும் இவனல்லாவேறோ
அருமையாய்யான் சொல்லி வைத்தேன்—இந்த
அருமையான சிவயோகமே மானே (சிவா) (5)

ஆவென்று சொன்ன அகண்டம்—யிதில்
அங்கென்று சொன்னது பிரணவமந்திரம்
ஊவென்று சொன்னது உலகம்—இதை
யுற்றுணர்ந்தோர்களே தேவாதிதேவன் (சிவா) (6)

அண்டமாகி நின்றஜோதி—இந்த
அகிலமெல்லாம் கட்டி அரசாளவென்று
பிண்டமாய் வந்துபிறந்து—மரு
பெண்ணு சொரூபமாய் நின்றதேஜோதி (சிவா) (7)

ஆணுக்குகோசமாய் நின்று—அதற்
கடுத்தபக்கத்திலே பீஜமாயிருந்து
நாணமில்லாமலே மோகங்—கொண்டு
நாடிவிளையாடுங் கோலமே கோலம் (சிவா) (8)

பெண்ணுக்குயோனி யொன்றாக—யென்றன்
பித்தனை கருக்குழியாக யிருந்து
உண்ணுமுப்பின் மதத்தாலே—மோக
பொத்துகலந்து நீகொண்டதே கோலம் (சிவா) (9)

சிந்திய விந்து திரண்டு—கரு
சேர்ந்தாணும் பெண்ணென்றும் பிறந்தாயே தோழி
அந்திர பாவைபோலாட்டி—இங்கே
அடிமுடியாகியே நின்றதும் நீயே. (சிவா) (10)

இன்பம் கொடுப்பதும் நீயே—இதற்
கிணங்கி படுப்பதும் நீயல்லால் வேறே
கம்பனமானதும் நீயே—யெனை
தாய்போல் வளர்த்ததும் நீயல்லால் வேறே. (சிவா) (11)

இப்படியாகப் பிறந்தேன்—யென்னை
எல்லாரும் கண்டுமே சீ சீ என்றார்கள்
அப்பன் யீசனருளாலே—யிங்கே
அசையாமல் நின்றுமே லானந்தமானேன். (சிவா) ()

வந்த வசனங்க ளெல்லாம்—அவன்
வாயாலழிகிறானென்றுமே யெண்ணி
சொந்த மனவி யிடத்தில்—யானும்
ஏகமாயிருந்து சுகித்துக்கொண்டேண்டி (சிவா) (13)

வாயாலேபேசிய வார்த்தை—யெல்லா
வட்டியதாமென்று சொன்னாரே மூன்னோர்
விசமாகுமிந்த வசனம்—யென்று
விதியறிந்த பெரியோர்கள் சொன்னார். (சிவா) (14)

சிவ சிவாயென்ற வசனம்—சக
ஜீவகோடியெல்லாம் இதனாலே வாழ்வு
அவசியம் படியாதேயென்று—யென்னை
அனைவோரும்பேசுறார் பாரடி தோழி (சிவா) (15)

தன்னை அறியவும் சொன்னார்—யிந்த
தாரணியிலென்னை எழுதவும் சொன்னார்
அன்னை பிதாகவாக யிருந்து—யென்னை
அப்படி யெழுதவும் சொன்னாரே தோழி (சிவா) (16)

தப்பிதம்கோடி இருந்தாலும்—யென்னை
தாங்கியெடுப்பது நீயல்லால் வேறோ
ஒப்பியெழுதச் சொன்னீரே—யிது
உடையவனுத்திர வானது தோழி. (சிவா) (17)

எந்தனை காப்பதும் நீயே—யெனக்
கெல்லாம்தெரிவித்து வைத்ததும் நீயே
சொந்தச்சடலமென் றெண்ணி—யென்னை
சுமந்துகொண்டிருப்பது நீயல்லால் வேறோ (சிவா) (18)

வந்தவிதியெல்லாம் நீயே—முன்னால்
வாக்குவசனத்தி னலேயே தோழி
தந்தமதியெல்லாம் நீயே—யென்றன்
தகப்பனாய்நின்றது நீயல்லால் வேறோ (சிவா) (19)

தந்தை மதியெல்லாம் நீயே—யென்னைத்
தாங்கியே நின்ற அறிவெல்லாம் நீயே
சந்தையுரவெல்லாம் போக—ஞான
சற்குருவானதும் நீயல்லால் வேறோ (சிவா) (20)

மனம்புத்தியானதும் நீயே—வுள்ளே
மதிக்குமேலறிவான தெல்லாமும் நீயே
கனமான கருத்தெல்லாம் நீயே—வுள்ளே
கண்டத்தில் நின்றதும் கடவுளும் நீயே (சிவா) (21)

அண்ணாமலை யென்ற ஜோதி—யென்றன்
ஆதிமலை யுச்சி நீதியே நீதி
பண்ணுங்கருக்குழி யுள்ளே—விதி
பார்த்து யெழுதிட்ட ஜோதியே ஆதி (சிவா) (22)

உண்ணாமலை என்ற நீதி—யென்னோ
டொத்தாயிருந்து வுணர்வான ஜோதி
கண்ணுக்கு மணியாகநின்று—யென்றன்
கண்டத்தில்நின்று கடந்தாயே ஜோதி. (சிவா) (23)

உண்டுக்கொண் டென்னோடிருந்து—நீயும்
உலகத்திலெங்குமே யோடி யலச்சிற்
கண்டத்தின் மேலேழுவாசல்—யிதில்
கலந்துவிளையாடி கடந்தாயே ஜோதி (சிவா) (24)

நாசிக்கு வாசமாய் நின்று—யென்னை
நாட்டிலே யெங்குமே பாட்டைக் கொடுத்தீர்
பாசமாய் பலவிதம் வேண்டாம்—யென்னை
பரமனடி காண வர வா வா தோழி (சிவா) (25)

கண்ணுக்கு வெளியாக நின்று—நீயும்
காடுசெடி யெங்கு மோடியலைந்து
விண்ணும் மண்ணுக்கொளியாக—நின்று
விளையாடி மரவான ஜோதியே ஜோதி (சிவா) (26)

நாவுக்கினிமையாய் நின்று—யென்னை
நாய்போலயெங்குமே நாணாத பிச்சை
பேய்போலே யானுமே நின்று—வுன்னை
பித்தனே வா வா வா வென்றேனே தோழி (சிவா) (27)

பித்தெழுத்து மேலேறி—யானும்
பின்னுமுன்னுமாக யோடியலைந்து
அத்தானிருப்பிடம் கண்டு—யானும்
அங்காடிவீதிலே தங்கினேன் தோழி (சிவா) (28)

காதுக்குவோக்ஷமாய் நின்று—யென்னை
கண்டபேரெல்லாம் பெண்டுக்கழைத்து
வாதுக்குச் சண்டைக்குப்போக—யென்னை
வம்புசெய்யும்படி விட்டாயோ தோழி [சிவா] [29]

என்னையே நீ யுண்டுபண்ணி—நீயும்
எனக்குள்ளிருந்துமே யேகமதாகி
மூன்னையறிவாக நின்று—நீயும்
மூக்கோணம் தன்னிலே யிருந்தாயே தோழி. [சிவா]

ஆணென்று நீ தானே நின்று—வுனக்கு
அநுபோகம் செய்யவே பெண்ணுண்டுபண்ணி
காணென்று ஞானக்கண் காட்டி—யெந்தன்
காமன்கணையை யருத்தாயே தோழி [சிவா] [31]

ஆணுக்கும் பெண்ணுக்கும் இரண்டு—வகை
அச்சுண்டாக்கி நீ யனுபோகம் பண்ணி
பெண்ணுக்கு கொம்பிரண்டாக—நின்று
பித்தனே நீயுமே கொண்டதே கோலம் [சிவா] [32]

ஆணும் பெண்ணுங்கூடி நேசம்—நீயும்
அறிவுக்குளறிவாக அழுந்திய விந்து
காணும்படியாக பாய்ந்து—நீயும்
கருக்குழி பாத்தியிற் கலந்து முளைதிற் [சிவா] [33]

உருவாக யென்னையே பண்ணி—நீயும்
ஒத்தாசையாகவே வுடலைச்சுமந்து
பருவமதான வுடனே—யானும்
பாமனைகண்டு மயங்கினேன் தோழி [சிவா] [34]

கூடிக்குலாவிய யின்பம்—இந்த
கூத்துவன்பண்ணிய கோலமே கோலம்
பாடியகருக்குழி யுள்ளே—யானும்
பையென்ற தொட்டிலில் வளர்ந்தேனே தோழி [சிவா]

வளர்ந்தேனே பத்துற்ற திங்கள்—யானும்
வளமானபடிவாசல் நழுவி விழுந்து
பழம்தின்ன உலகத்தில் வந்து—யானும்
பத்துவயதிலே பக்குவ மானேன் [சிவா] [36]

பத்துவயதுக்கு மேலே—யானும்
பரமனடிகண்டு பயந்து நடந்து
எத்திசையும் கட்டி வாழ்ந்தேன்—யிது
என்னுடம்பில்லையென் றிதையா னருந்தேன் [சிவா] []

ஏனிந்தஜடலத்தை யெடுத்தோம்—யென்று
எண்ணியெண்ணி யானும் பார்த்துத்தெளிந்து
கோணிந்த ஜடலமாய் வந்து—நாமள்
கொண்டகடனுக்கு தந்தானே தோழி (சிவா) 38

வந்தவிதியெல்லாம் தாங்கி—யானும்
வானவரைக்கண்டு நேசமதாகி
தந்தைமதியென்ற றிந்து—யானும்
தகப்பனைக்கண்டு பணிந்துகொண்டேனே (சிவா) 39

அக்கினிகோட்டையே வானம்—யிதை
யளந்துமேபார்த்தபே ராருமேயில்லை
முக்கியமான முக்கோணம்—யிதில்
மூழ்கினபேர்களே முழுஞானியாகும் (சிவா) 40

அண்டமாகநின்ற ஜோதி—யிந்த
யகிலமெல்லா முயிராகவே நின்றார்
கண்டமெஞ்ஞானத்தின் காக்ஷி—யானும்
கையாலெழுதினேன் கடவுளேசாக்ஷி (சிவா) 41

எழுதிட்டேன் கொஞ்சம்மெஞ்ஞானம்—நீங்கள்
யெல்லாரும்தாங்குங்க ளீசனே ஈசன்
பழுதில்லாமெஞ்ஞான மிதுவே—கண்டு
பார்த்தப்படித்தவன் பரமனே பரமன் (சிவா) 42

ஆண்டகடவுள் நமக்கு—செய்யும்
அதிசயம்சொல்கிறேன் கேளடிதோழி
தாண்டவங்கள் மெத்தயாடி—நம்மள்
தாய்தந்தைபோலவே யிருக்கிறார்தோழி (சிவா) 43

கண்ணுக்கு சூரியனாக—நம்முள்
கார்த்துவருகின்றார் காணடிதோழி
விண்ணுமண்ணாகவே நின்று—நாமள்
வேண்டும்கனியாக தந்தாரேதோழி (சிவா) 44

மழைக்கு மழையாக நின்று—யிங்கே
மதிக்குமேலறிவாய் மகத்துவமாகி
பழங்கனியாகவே நின்று—நமக்கு
பலவித்தாய் நின்றாரே பசியாறிக்கொள்ள (சிவா) 45

பூமியாகஎங்கும் நின்று—யிவர்
பூத்துச்சொரிந்து மரஞ்செடியாக
நேமித்தகனியெல்லா முண்ணு—யென்று
நெத்திக்கண்ஞானமாய் நின்றார்தோழி (சிவா) 46

சூரியனாகவே வந்து—நாமள்
சொன்னபடியல்லாம் செய்யுமேயென்று
காரியமான யரிவால்—அய்யன்
கண்மூக்குசெவியாக யிருக்கிறார்தோழி (சிவா) 47

சந்திரனாகவே வந்து—நமக்கு
சாற்றியரகசியம் சொல்கிறேன்கேளும்
முந்தியவினைபோல தேய்வு—பிறை
முன்னாலேகாட்டியே வருகின்றார்தோழி (சிவா) 48

காற்றுமழையாக நின்று—நமக்கு
கனகத்திரவியம் தந்தாரேதோழி
பார்த்தும்படியோர ஞானம்—நல்ல
பருமூக்குநெத்தியை பாரடிதோழி (சிவா) 49

பெண்சாதியாகவே வந்து—பெற்ற
பிள்ளைகளென்றுமே பேருமேகொண்டார்
கண்டத்தில் நின்றாடிக்கொண்டு—அப்பன்
கடந்துபோனவழி கண்டாயோதோழி (சிவா) 50

சிவசிவாயென்ற யெழுத்தை—யானும்
சிந்தையில்வைத்து சிறசின்மேல்சூடி
அவசியமாகப் படித்து—யானும்
ஆண்டவன்பாதமே சேருவேன்மானே (சிவா) 51

இடும்பரெல்லாம்கூடி யென்னை—யிதை
யேன்படிப்பாயென யென்னைத்துரத்தி
கடுகடுத்தென்னையே பேசி—அவன்
கழுதையாய்ப்போனானே அம்மம்மாதோழி (சிவா) 52

சாபம்கொடுக்கவே யில்லை—அவன்
சண்டாளகோபத்தால் தானேதான்கெட்டான்
கோபம்கொடுத்திட வில்லை—அவன்
கொண்டவிதிக்கிது தண்டனையாச்சே [சிவா] 53

கண்டதைவிண்டுமே சொன்னேன்—யிது
கடவுளின் தண்டனை யானென்னசெய்வேன்
விண்டது அணு பிசகாது—யிது
வீணல்லவீணல்ல அம்மையினாணை [சிவா] 54

அம்மாபராசத்தி நீயே—யென்றன்
அங்கமெலாமுன்றன் கோலமேகோலம்
உம்மாவே வுந்தனடிமை—யென்னை
உடையவன்பாதமே சேருவேன்மானே [சிவா] 55

கண்ணுக்குளாடிய கருத்தை—யென்றன்
கடவுளேஉன்னுட பாதமேபாதம்
விண்ணுக்குமண்ணுக்கொன்றாக—நின்று
விளையாடிஅக்கினி சுடரேவுன்பாதம் ; [சிவா] 56

அண்டமளாவிய ஜோதி—யிந்த
அகிலமெல்லாம் பெருமோகமேகொண்டு
கண்டத்திலாடிமேல் வீட்டில்—அங்கு
கதவைஅடைத்த கர்த்தனேஜோதி [சிவா) 57

சிவாயமென்று சொன்னயெழுத்தை—நீங்கள்
சிந்தையில்வைத்து சிரசின்மேலாடி
அவசியமாகப் படித்து—நாமள்
அனைவோரும்கரையேரி மேல்வீடுபோவோம் (சிவ)58

பசியவே பாலாக கண்டு—யிந்த
பரமனேதயிராகப் பாவித்துக்கொண்டு
விசுவாசம்நேசமாய் வைத்து—நாமள்
வேகமாய்மேல்வீடு யோகலாம்தோழி [சிவா] 59

வெண்ணையை கண்ணனுய்வைத்து—நாமள்
வேகாத்தல்த்திலே நெய்யாகக்காச்சி
எண்ணும்பரமனைத் தேடி—நாமள்
ஏகலாம்பரகெதி வாருங்கள்தோழி [சிவா] 60

அறிவுக்கு அறிவானநாதன்—யிந்த
அம்பலத்தைக்கட்டி யறசாளயென்று
கரிமுகக்கணபதி தோழி—யிவர்
கருக்குழிக்குள்ளேதா னிருப்பாண்டி மானே [சிவ]61

கருக்குழி பாத்திக்குள் ளிருந்து—பழைய
கணக்குப்பிசகாமல் எழிதினர் தோழி
முருகியபழவினையாலே—வறுமை
முழுகியேவிழுகிறான் பாரடி தோழி [சிவா) 62

ஆனடி சேருவோம் வாரும்—மென்றன்
ஆதிக்குருவடி யுண்மையே சொன்னேன்
குரவேடம் போட்டு நீ யலைந்தால்—உன்னை
கொல்லுவான் கொல்லுவான் யம்மையினாணை [சிவா] [illegible]

நேற்றுயிருந்தாரைக் காணோம்—யிது
நிச்சயமில்லையே அச்சமே காலன்
பார்த்துப் படியேறி வாரும்—நாமள்
பரமசிவனிடஞ் சேரவோ தோழி [சிவா] 64

மண்ணென்றும் பொன்னென்றும் தேடி—ஒரு
பாகாணி நேரமும் நில்லாது காணும்
உண்ணு முணவையே நாடி—நின்று
ஊருசியாய் நின்றவன் யாரென்று தேடு [சிவா] 65

ஐந்து பிரிவான தேவன்—இதை
ஆண்டுகொண்டவனே பஞ்சவர் நேசன்
சஞ்சலமில்லா சகாதேவன்—இவன்
சந்நிவாசலில் யிருப்பாண்டி தோழி [சிவா] 66

வாசலுக்குள்ளொரு வாசல்—யிதில்
வானவர்களெல்லாம் வருவார்கள் தோழி
மோசமில்லா பெருவாசல்—யிது
மூத்திக்கு சத்தியம் உத்தமி வாசல் [சிவா] 67

சத்தியமான தலத்தை—யொரு
சண்டாள குரங்கது சாடுது தோழி
நெத்திக்கும் கீழடிவாசல்—யிதில்
நேசமாய் மேல்விடு ஏறலாந் தோழி [சிவா] 68

உற்ற செய்தி சொல்லக்கேளும்—உனக்
குதவியாய் நின்றிடுமுண்மையைகாரும்
பற்றியே நெற்றியிலேரும்—அங்கு
பரமன் விளையாடும் பாழ்வீட்டை காரும் [சிவா] 69

கண்டதிலே யொரு கதவை—தினம்
கட்டிக் கட்டி நித்தம் கவனித்து யேற்றும்
அண்டத்து வாசல் திறந்தால்—யிது
யாருக்குமெட்டாது அரபிக் குதிரை [சிவா] 70

கண்டத்தினுள்ளாறு வாசல்—இங்கே
கடுந்தாப்பாலொன்று யிருப்பது தோழி
சண்டைக்கொடி சகாதேவன்—யிதை
சற்கயிற்றாலேதான் கட்டினான் தோழி [சிவா] 71

கட்டிய கயிற்றாலே கண்ணு—யிங்கே
கார்த்துப் பிதுங்காமல் அடைத்தானே தோழி
மூட்டிய முக்கோண வீதில்—யானும்
மூழ்கியே யழுக்கை துடைத்துவிட்டேனே [சிவா] []

என்னென்று சொல்லுவேன் தோழி—யிந்த
யிகத்திலே கோபத்தை முன்னாலே வைத்து
கன்னல்மொழி மாதுவென்று—அவன்
கலங்கிக்கிடங்கிலே விழுந்தாண்டி தோழி [சிவா] 73

விழுந்து யழுரிலே மூழ்கி—யவன்
வெரிபிடித்த நாயைப்போலெயலரி
தழர்ந்துமே வயது நூறாக—அவன்
தள்ளாடித் தள்ளாடித் தயங்குறான் தோழி [சிவா] []

தள்ளாடி விழுந்தானே மண்ணில்—அவன்
தாயும் தகப்பனைக் காணானே தோழி
குள்ளநரிபோலே வூளை—யிட்டு
குழிமண்ணுக்கிரையென்று சொல்லடி தோழி [சிவா]

இறையான கடை கெட்ட கோபம்—அவன்
எமனுக்கே ஆளென்று சொல்லுவேன் தோழி
கரையேரமாட்டானே அம்மா—அந்த
கடுஞ்சிட்டு கோபமாயிருப்பதினாலே [சிவா] 76

கோபத்தை கொல்லுவாய் நெஞ்சே—யிங்கே
கூடியிருப்பது பொய்யான வாழ்வே
பாவத்தை விரும்பாதே நெஞ்சே—உன்னை
பழவினையென்று கொல்லுவான் காலன் [சிவா] 77

ஆண்டவன் சன்னதி வாசல்—பக்கம்
அரங்கு வாசலொன்று இருக்குது பாரும்
காண்டீபன் தம்பி சகாதேவன்—யிவன்
கட்டிய கபாடி முட்டித் ததும்பும் [சிவா] 78

முட்டித்ததும்பிய ஞானம்—யிங்கே
முக்கோண வீதியில் கட்டிச் சுழலும்
எட்டியே மேல் வீடு கண்டால்—யிது
மட்டுக்குளடங்குமே பாரடி தோழி [சிவா] 79

ஒருவனுய் நின்றாண்டி தோழி—இவர்
ஒத்தையில் கில்லாமல் யிருபேருமானர்
கருவுக்குள் கருவாக பாச்சி—யிவர்
காயச்சடமாக வந்தாரே தோழி [சிவா] 80

இருபேருங் கலந்துமே கூடி—யிந்த
யிகத்திலே காமனு நின்றே தோழி
கருவிலே பலஜாதி யாகி—இவர்
கலந்துவிளையாடிக் கொண்டதே கோலம் [சிவா] 81

வளர்ந்துமே பத்துநூறு ருகி—இவர்
வண்மையாய்க் கோடானகோடியாய் கலித்து
பழமாக காய்த்துமே பூத்து—யிவர்
பலருக்கும் புசிப்பாக நின்றாரே தோழி [சிவா] 82

நின்றநிலை யென்ன சொல்வேன்—யிது
நெடுந்தூரம் நெடுந்தூரம் அம்மம்மா தோழி
குன்றான குருபாதங் காண—வுன்றன்
குலைக்கு மேலே யொரு கோபுரவாசல் [சிவா] 83

இருபேரு மொன்றாக யிருந்து—யிவர்
இணங்கி முக்கோணத்தி லிருந்துமேலாடி
கருவுரு வாகவந் தென்னே—யிங்க
கணக்காக நால்வேத மானாரே தோழி [சிவா] 84

நாலுவேத மொன்றாய்க் கூடி—யிந்த
நாட்டிலே பலஜாதி யென்றுமேபேசி
கூட்டிவிருந்துமே கொண்டு—யிவன்
குடியைக் கெடுக்கிறான் பாரடிதோழி [சிவா] 85

ஐந்துபேரு மொன்றாய்க் கூடி—யிங்கு
அநியாய மநியாய மம்மம்மா தோழி
பஞ்சவ ரென்றுமே ரெடுத்து—யிவர்
பதா அடிக்கிறார் கேளடி தோழி [சிவா] 86

வஞ்சகங்கள் மெத்த செய்வான்—யிவன்
வலியமடி பிடித்து யிழுப் பாண்டிதோழி
சஞ்சலம் மெத்தவும் கொடுப்பான்—யிவன்
சண்டாளப் பஞ்சவரென்றுமே பேரும் [சிவா] 87

அஞ்சி பேர்களையுஞ் சொல்ல—நீயும்
ஆசையோடு கொஞ்சங்கேள்டி தோழி
நெஞ்சாரப் பொய்யுமே சொல்லான்—யிவன்
நேசமா யிருந்துமே வதைபண்ணி கொல்லுவான் 88

அஞ்சிபேர் தங்களி லொருவர்—யிவ
ரனியாயஞ் செய்யவே மாட்டாரே தோழி
நெஞ்சிக்கு மேலே யிருப்பார்—யிவர்
நேசத்தினு லடியுலகத்து வாழ்வாம் [சிவா] 89

ஆருபேர்கள் கூடி யொன்றாய்—யிந்த
அரங்குவீட்டி னுள்ளே யடைத்துமே யிருப்பார்
குருபர நாதனே யிவரும்—யெனக்
கொண்டகணவனு மிவனல்லால் வேறே [சிவா] 90

ஏழுபேருகளுங் கூடி யொன்றாய்—யெனக்
கேற்றபணிவிடை செய்யுமே யென்று
வாட்டிப்பிழிகிறாள் கன்னி—யிந்த
வகையென்ன சொல்லுவேன் கேளடிதோழி [சிவா] 91

எட்டுப்பே ரொன்றாகக் கூடி—யிவ
ரெட்டுத்திசை கட்டியரசாள வென்று
மட்டில்லாக் கோபமேமீறி—யிவன்
மாழ்கிறான் மாழ்கிறான் பாரடி தோழி [சிவா] 92

கோபத்தைக் கொன்றவன் பரமன்—கோபங்
கொண்டு யிருப்பவன் குறவனே குறவன்
பாவத்தை விட்டவன் பரமன் பாவம்
பழகியே வந்தவன் குறவனே குறவனே சிவா 93

ஒன்பது பேருமே கூடி—யிங்கே
யொத்துக் கலந்துமே பஞ்சாயம் பேசி
அம்பல நாட்டுக்கணக்கன்—யிதில்
ஆனை பெரியவ னொருவனே யுண்டும் [சிவா] 94

நாட்டுக் கணக்குமே பேச—தினம்
நல்நவக் கிரகமாய் பாரடி தோழி
கூட்டிலிருந்துமே பேசும்—யிவர்
குருவான குணமடி கேளடி தோழி [சிவா] 95

பத்துப்பேரொன்றாக கூடி—யிந்தப்
பதிதனிலிருந்துமே பக்குவப் படுத்தி
யொத்துக் கலந்துமே பேசி—யிவர்
ஒன்பது வாசலு மடைந்தாரே தோழி [சிவா] 96

பத்தெழுத்தென்றுமே பேசி—யிந்தப்
பதிதனிலொன்றாகப் பஞ்சர்யம் பேசி
பொத்துக் கலந்துமே பேசி—யிவ
ரூமை யெழுத்தென் றிருந்தாரே தோழி [சிவா] 97

பனிரெண்டு பேருமொன்றாக—நின்று
பந்தயம் பேசி பலதாகங்கொண்டு
அனியாயஞ் செய்துமே நித்தம்—யிவன்
அலைமோதி மாண்டானே கேளடி தோழி [சிவா] 98

பன்னிரண்டு பேருமொன்றாக—நின்று
பாங்கான சதுரகிரியிலே நின்று
உன்னதமாக கெம்பீரம்—கொண்டு
வொருவனைக் காணாமலலையுதே யுலகம் [சிவா] 99

ஒருவனைக்கண்டு பிடிக்க—வொரு
உண்மையான் செல்லுகிறேன் கேளடி தோழி
பருவதம் போலொரு மாவு—நித்தம்
பழுத்துச் சொரிந்து கனியாயிருக்கும் [சிவா] 100

அருமையாயுண்டு தெளிந்தா—யிது
அடிமுடி யிதுதானே அண்ட மலையும்
பருவதமான மா மரமும்—கனி
பழுத்துக் கிடக்கின்றதெல்லோரும் வாரும் [சிவா]101

மதுரமாயிருக்கும் மாங்கனியும்—யிதை
மண்டலத்துள்ளோர்கள் கண்டு பொசிப்போம்
சதுரகிரி மலைமேலே—நல்ல
சந்தன மரமொன்று யிருக்குது தோழி [சிவா] 102

உந்தித் கமலத்தைப் பாரும்—யிதில்
ஓங்கி முளைத்ததோர் மூங்கில் மரத்தில்
ஒட்டுமாங் கனியெனபேரு—யிதை
யுண்டு சுகித்தவன் சித்தனே முத்தன் [சிவா] 103

அந்திரமான மாமரத்தில்—யிங்கே
ஐந்துரெண்டு குகையுண்டுமே தோழி
முந்தி விநாயகனாலே—குகை
முழுதும் தெரியுது கேளடி தோழி [சிவா] 104

எந்திய விளக்கது போலே—தினம்
இனங்காட்டி வாழுமே பாரடி தோழி
சாத்திய யிடவலக் கண்ணில்—ரெண்டும்
சம்மதித்து வாழும் ரவி மதி தோழி [சிவா] 105

சொல்லுக்குசெவிகாது போல்—யிது
சொன்னபடியெல்லாம் தொட்டுமே காட்டும்
அல்லும் பகலும் தேசம்—செவி
யரையுதெப்போதும் கேள்டி தோழி [சிவா] 106

கோபுர வாசலும் ரெண்டு—யிதில்
குளிர்ந்த சந்தனம் மணக்குது பாரும்
சரமாரி சன்னதி வாசல்—யிதில்
சந்தை தெருவுக்கு மேல்புறம் வாசல் [சிவா] 107

அசைவான வாசலே யொன்று—யிதில்
அஞ்சுரெண்டு குகையாச்சடி தோழி
பசைபோலே யாட்டியரைக்கும்—யிதை
பரமனே பார்த்துரை செய்குவான் தோழி [சிவா] 108

ஏரவே யேழ்குகை வழியே—யிதற்
கிணங்கி நடப்பவரெவர்காணும் துணியே
பேரெல்லாம் மடியுமே தீயால்—யிந்தப்
பேரையெடுத்தவன் சித்தனே முத்தன் [சிவா] 109

ஏழாங்கு மெத்துக்கப்பல்—யிதற்
கிணை சொல்ல யிங்கொரு கப்பலுமில்லை
கோழர வாசியிலேரி—குடி
கொள்ளலாங் கொள்ளலாங் வாருங்கள் தோழி [சிவா] []

வாங்கியே மேல்வீடு வைத்தால்—யோகம்
வகைசொல்ல வொரு ஞானமிதற்கீடு உண்டோ
தாங்கியே மேல்வீடு யேற்று—நம்மள்
தலைவனெயிங்கேயிருப்பாரண்டி தோழி [சிவா] 111

வாங்கியும் யேங்கியும் நில்லு—பொல்லா
வம்பனெல்லாஞ் செற்றுப்போவாண்டி தோழி
பாங்கியான மனக்குரங்கும்—யிவாழ்
பட்டுப்போன சுடுகாட்டி தோழி [சிவா] 112

சுடுகாட்டுத் தெப்பக்குடத்தில்—யிதில்
சுற்றிவர தென்னை மூங்கி மாமும்
படுகளமான யிடமே—யிதில்
பக்தரெல்லாந் தானே மூழ்கிக் குளிப்பார் [சிவா] 113

வழிதுரையானதும் சொல்லி—யங்கு
வாழும் பரமனுட வீட்டையுஞ் சொல்லி
குளிக்கும்படி துரைகாட்டி—யானும்
கொண்ட மெஞ்ஞானத்தை விண்டுசொன்னேனே 114

காலு பனிரெண்டை யொன்ருய்—யானும்
கம்பத்தி லேர்க் கயிற்ருலே கட்டி
கோலுகளை யொன்றை யூணி—யதிற்
கூத்தாடிக் கூத்தாடிக் கண்டுகொண்டேனே [சிவா]115

கோலு முச்சந்திலே யூணி—யானுங்
கொண்ட கணவனைத் தன்னுள்ளே கண்டு
காலு பனிரெண்டை கட்டி—யானுங்
கர்த்தனைக் கண்டு பணிந்துகொண்டேண்டி [சிவா] 116

முச்சந்தி தெருவிலே கம்பம்—அந்த
மூங்கில் மரத்தின் முனையிலே யேரி
அச்சமில்லாமலே நின்று—விளை
யடிபணிந்து யடிமுடி யானேன் [சிவா] 117

களைமரத்தி லேரி யாட—வென்னைக்
கண்டபேரெல்லாருங் கடுக விரட்டி
பழமுண்டு நின்று பணிந்து—யானும்
பரமனடியிற் பதுங்கிக்கொண்டேனே [சிவா] 118

எண்சா ணுடம்பான வீடு—யிதற்
கிணைசொல்ல யிங்கே யொருவருமில்லை
ஐந்து நாலுங் கொண்டதொரு வாசல்—யிதில்
அப்பனுமம்மையுங் கொண்டதே கோலம் [சிவா] 119

தச்சியில்லாமலே கோட்டை—யிது
தகப்பனுந் தாயுமே பண்ணிய வோட்டை
உச்சி வெழியான வாசல்—யிது
வொருவனாலே யிது பண்ணிய பாட்டை [சிவா) 120

இன்பமான பெருங்கோட்டை—யிதற்
கிணைசொல்ல யிங்கே யொருவரு மில்லை
கம்பத்திலேரிய பாட்டை—யிந்தக்
கதைசொல்ல வென்னாலே முடியாதே தோழி சிவா 121

•

•

கப்பத்தி லேறுத கோட்டை—யிது
கரிக்கோட்டை யென்றுமேச் சொல்லடிதோழி
துன்பத்தைச் சுமந்துமே கொண்டு—யிது
சுடுகாட்டு பிணமென்று தள்ளடிதோழி ]சிவா] 122

அண்டமலை உச்சி யோரம்—அங்கு
கண்டங்கருத்தானைக் கண்டுமே னுண்டேன்
தொண்டரெல்லாங் கூடியிருந்து—யிதைத்
திரந்தவெளி யென்று வுண்டோமேதோழி (சிவா )123

உண்டோமே வாசி மயிலே—யிந்த
வுண்மையறிந்த பெரியோர் களாலே
மண்டலவாசி மலையில்—யானும்
மச்சிவீ டொன்றுமே கட்டினேனேதோழி சிவா 124

யோகத்தி லருபத்தி ரன்கு—யிந்த
வுலகத்துச் சனமெல்லா மனுபோகமதுவே
தாகத்துக் குண்ணீரைப்போல—யோகம்
தன்னையறியாத பேர்களே தோழி (சிவா) 125

இந்த யோகத்தாற் பிரப்பு—உண்டும்
இதற்கிணை யில்லையென்று பேசு முலகம்
தந்ததோர் சதுரகிரியில்—னுள்ளே
தந்திர மாகியே வாசி மயிலே • (சிவா) 126

கருவாங் கருக்குழியி லிருந்து—வாசி
கணக்காய் பிடரி வழியேறுந் தோழி
உருவாங் கருநெல்லி மரமே யிதற்
குறைசொல்ல யிங்கொரு ஞானமு மில்லை (சிவா) 127

அருமையாய்க்கருநெல்லி மரமும்—யிங்கே
அண்ணாந்த யிடத்திலே வளருமே தோழி
அருமையாய் பாரடி மானே—குரு
ஆகிநின்ற கருநெல்லி மரந்தான் (சிவா) 128

ஒருவனு யிருந்துமே யுண்டால்—லிங்கே
ஊளி யூளி காலம் வாழலாந் தோழி
யிருபேரு மிருந்து மேலாடி—யிது
யெல்லை கடந்த வழி சொன்னேன் தோழி சிவா 129

விட்ட யிடமும் மிதுவே—சிவன்
வட்ட வீட்டிலேயே வாழ்வதும் மிதுவே
கட்டயனுஞ் சகாதேவன்—யிந்தக்
கயிறை யெடுத்துமே கட்டினான்தோழி (சிவா) 130

கட்டிய கயற்றுலே கண்ணு—உள்ளே
கண்டத்தில் நின்றுமே தாண்டவமாடி
ஒட்டுமாங் கனியடி தோழி—யிதை
யுண்டுபசியாறிக் கொண்டேனே தோழி (சிவா) 131

முட்டிய வாசிமயில் லேறு—யிதில்
முழக்கமே பதினெட்டு வாத்தியம் பேசும்
மட்டில்லா பிறவியே போகும்—யிது
மகாராஜன் சன்னதி வாசலே தோழி (சிவா) 132

சுத்தமான பெருவாசல்—யிதில்
சொன்னபடி நாமளும் தெரிசனைசெய்தால்
அத்தானிருப் பிடமும் யிதுவே—யிது
ஆண்டவன் சன்னதிப் பாரடிதோழி (சிவா) 133

சன்னதி வாசலே ரெண்டு—யிதில்
சாமாதி பாயுமே மேல்வீடு போக
அன்னையும் பிதாவுமா யிருந்து—யிங்கே
அங்கென்ற மந்திரமா யிருந்தாரே தோழி (சிவா) 134

அங்கென்ற வாசல் படைந்து—யிதில்
அரங்கு வாசலுக்குள்ளே பழகியேவந்தால்
பங்கமில்லா பெருவாசல்—யிங்கே
பரமனைக் கண்டுமே யிருப்பேண்டிதோழி (சிவா) 135

இருப்பேனே வட்டமேல் வீட்டில்—யிங்கே
பேகாந்த தும்ப மலருன உச்சி
அறுப்பேனே கருவிகளை யெல்லாம்—யிந்த
அந்திர மானதொரு சதுர கிரியில் (சிவா) 136

சதுரகிரி மலையுச்சி—மேலே
சத்திய மானதொரு தெப்பக்குளமும்
பெதறும மேலறியே போக—யிங்கே
எட்டுநாலு தத்துவமும் யில்லையேதோழி (சிவா) 137

ஏனிந்த சடலமாய் வந்தோம்—யிதில்
யீசனே தானுயிருந்தாரே தோழி
ஆனந்தமான கிரியில்—நாமம்
அப்பனைக் கண்டுதெரிசிப்போம்தோழி (சிவா) 138

மானும் மயிலுமே கூடிகூவி—நித்தம்
மருகிவிளையாடி யிருக்குமே தோழி
கானமயி லென்ற வாசி—யிது
கறைஏற வழிபாதை வாங்கடிதோழி (சிவா) 139

இடஞ்சலில்லாப் பெருவாசல்—யிது
யிணை சொல்லயிங்கே ஒரு ஞானமும்மில்லை
கடுஞ்செட்டு கோபத்தை யறுத்தால்—யிதில்
களைகளும் முளையாது காணடி தோழி (சிவா) 140

தண்டிகை பல்லாக்குமே என்னை—உன்னை
தாங்கி சுமந்து சிறியாறு மென்னை
சண்டி எருது மாடென்று—பறை
சாற்றுகிறேன் கொஞ்சம் கேளடிதோழி (சிவா) 141

முச்சந்தி வாசலில் கதவு—யிங்கே
முளைத்துமே தொங்குது பாரடிதோழி
அச்ச மில்லாமலே கதவை—யிங்கே
அகிலமெல்லாங் கதவை அடைத்துமே வாழும் 142

அடைத்தது திறந்துமே பழகி—யிங்கே
ஆண்டு பதிமூன்று வத்தியேவந்தால்
படைத்த பரம னெழுத்தை—யெல்லாம்
பையோடே கழண்டுதே பாரடிதோழி (சிவா) 143

கண்டறிந்து பார்க்கவேணும்—யிந்த
காயச்சடந் தாண்டி செய்யும்பாலாச்சி
தொண்ட செல்லா விண்டதில்லை—யாது
தும்ப மல்லான உச்சியே தோழி (சிவா) 144

தும்பத்தை நீ கொல்லவேணும்—யிது
துருசில்லாத சுத்தபாத்திரம் நீயும்
கம்பத்தி லேன்றுமே மானே—யிந்த
கடுங்கோபம் மாண்டாக் கால்கடவுளே தோழி 145

கம்பத்தில் நீ ஏறவேணும்—யிந்தக்
கால்மாற்றி கால்மாற்றி ஆடவேதோழி
தும்பமற்ற பெரும்வழியே—யிது
இல்லார மில்லடி உந்தன் குளி குளியே (சிவா) 146

கோபத்தை முன்னாலே விட்டு—சாறும்
குணத்தை யறியாமல் திரியுதே மாடு
பாவத்தை அள்ளி சுமந்து—யிது
பாழாகப் போகுதே அம்மம்மா தோழி (சிவா) 147

அடுத்தாரைக் கெடுக்காதே தோழி—யுந்தன்
ஆயுசு ஆயுசு அரைநொடி மானே
கெடுத்துமேல் வாழாதே தோழி—வினை
கிளங்காய் முளைத்துமேல் வளருமேதோழி சிவா 148

ஆட்டுக்குக் காலுமே ரெண்டு—யிந்த
அகிலமெல்லாம் உண்டு யிருக்குமே தோழி
கூட்டுக்குமேல் ரெண்டுவாசல்—யிதில்
கொஞ்சி விளையாடி கூட்டுக்குள்ளையும் (சிவா) 149

மாட்டுக்குக் காலில்லை தோழி—யிங்கே
மகராஜன் சன்னதி வாசலில் சேர்ந்தால்
கூட்டுக் கிழியை யடைத்து—நாமள்
கொஞ்சி விளையாடி யிருப்போமேதோழி (சிவா) 150

தோட்டத்தை துறந்து பூ வெடுத்து— யிந்த
துறக்கடலிலே முழுகியே நித்தம்
காட்டைக் கலைத்து வேட்டையாடி—யிங்கே
கைலைமலை மேலே யிருங்கடி தோழி (சிவா) 151

கோழிக்கி எட்டுக்கால் தோழி—யிதை
கொண்டுமே தின்றவன் தேவாதிதேவன்
மூளிக்குக் காதுமே நாலு—யிதை
மூக்கு நுனியிலே தெளிந்தவன் முத்தன் (சிவா) 152

தெளிந்துமே பாரடி மானே—யிதை
தென்னருனையான கோபுர வாசல்
இழிவான வசனத்தைத் தாங்கும்—யிது
எட்டும் நாலும் போனசுடுகாடே தோழி (சிவா) 153

அறுக்கணும் ஆயுதத்தி னாலே—யிந்த
அகில மெல்லாம் ஒருகுடையிலே வாழ
இருக்கணும் சிரஞ்சீவி யாலே—யிது
எட்டும்நாலும் அற்ற பெரும்பாதை மானே, 154

அருணை வினாயகா யுன்னை—எந்தன்
அங்கமெல்லாம் யுந்தன் கோலமே கோலம்
கருணை யிரங்கி வாமானே—யெந்தன்
கணவனே உனையல்லால் எனக்காருதேனே சிவா 155

குருமலைமே விருந்த சோதி—யெந்தன்
குணம்புத்தி மனமாக கலந்துமே விருந்து
மருமணம் பொருந்தி யென்னோடே—யிந்தம்
மருவி விளையாடி கலந்தாயே தோழி (சிவா) 156

அகலமான பெருஞ்சோதி யிங்கே
ஆழடிமைகொண்ட விபரத்தைக்கேளு
கவுலாக உலகத்தைப்பண்ணி—அவன்
கலந்து விளையாடும் கோலமேகோலம் [சிவா] 157

முலக்கணபதியாண்டி—யிங்கே
முட்டிவிளையாடும் ரவிமதியாண்டி
காலம் காலமாக மோகம்—யிங்கே
கலந்துவிளையாடும் கடவுளே கள்ளன் [சிவா] 158

பாரம் சுமக்கவும் வைத்தான்—யிங்கு
பழிக்குப்பழியாகச் சாவுங்கொடுத்தான்
காறக்கழுத்திலே நின்று—யிவன்
கண்டத்தில் நின்று கடந்தானே தோழி [சிவா] 159

ஏறி யிறங்கவும் சொன்னான்—யிங்கே
எட்டையும் நாலையும் கட்டவே சொன்னான்
காறிமிளுங்கவும் சொன்னான்—யிவன்
கண்டத்து சனிராகு கண்டாயோ தோழி [சிவா] 160

செய்யும் கோறணிஎல்லா மிவனே—இங்கு
செலுத்துவ தன்னுக்கு உன்னுக்குமானே
அய்யும் ஙகிலிஞ் சவ்வும் மாகி—யென்னை
அங்காடித்தெருவிலே ஆண்டாண்டிமானே[சிவா] 161

கண்டத்து சனிராகாய் நின்று—யிவன்
காலு பனிரெண்டுமாளுண்டி தோழி
மண்டலத்தில் தீபம் ஏற்றி—யிவன
மாறு சிறஞ்சீவி தந்தாண்டி தோழி [சிவா] 162

மாறு சிறஞ்சீவி ஏறும்—யிங்கே
மௌனமணியிலே சத்தம் தொனிக்கும்
காறக் கழுத்திலேகட்டும்—யிதை
கண்டவன் சித்தாதி சித்தனே தோழி [சிவா] 163

செத்த யிடம்தாண்டிமுத்தி—யிந்த
சிவயோக மந்திரம் செத்தயிடண்டி
அத்தானிருந்து கடந்த—யிது
அண்டத்து உச்சிமலையடி தோழி [சிவா] 164

மண்டலமறியாத மாந்தர்—அவன்
மனம்போலே படிப்பாண்டி கொடிவழிபாதை
கண்டதைக்கட்டவே மாட்டான்—யிங்கே
கதவையடைத்துக் குடியேறுன் தோழி [சிவா] 165

குடியேறிக்கொள்ளவே கேளும்—யிந்த
கோபுரவாசல் வழிஏறி விள்ளும்
படிப்படியாகவே யேணிப்—பாதை
பக்கத்துச்சுக்கானே நேரே நிறுத்தும் [சிவா] 166

சுக்கானே அக்காலும்யாகும்—யிந்த
சுளிமுனைக்குள்ளேவே கதவையடைக்கும்
அக்காலும் இக்காலும் பொருந்தும்—யிது
அண்ட உச்சிமலை சென்னேண்டி தோழி [சிவா 167

சொன்னபடி யெல்லாம்கேட்டு—நீயும்
சூது கபடெல்லாம்சுட்டுப் பறத்தி
சன்னதி வாசலில்யேறி—யிங்கே
சந்தணகாவுக்கு வாங்கடி தோழி [சிவா] 168

சந்தணகாவுக்கு மேலே—நாமள்
சாஸ்வதமாகயிருக்கலாம் தோழி
சொந்த புருசனடி நமக்கு—வீடு
சுத்தபரை வீடுகட்டுவான் தோழி [சிவா] 169

சுத்தவீடு எழுமெத்தை—யிது
சொல்லுக்கு யெட்டாது கொடுமுடிவாசல்
அத்தனை தேடியேபோனல்—நாமள்
அங்காடி வீதியில்தங்கலாம் தோழி [சிவா] 170

யிலக்கிய யிலக்கணப்படிப்பு—யிது
எட்டு நாலுங்கொண்டதத்துவ வசனம்
கலைமகளாலே படித்தால்—யிவன்
கரையேற முடியுமோ பாரடி தோழி [சிவா] 171

கல்வி சிறப்பெல்லாந் தள்ளும்—யிதை
கட்டு கட்டாகப் படிப்பானே தோழி
வல்லவனை உள்ளேபாரான்—யிவன்
வாய்ஞானம் பேசியே மாள்வான் தோழி 172

வாய்ஞானம் விட்டுமேபோடும்—உந்தன்
வாய்க்குள்ளே வாயிவழியாக ஏறும்
மெஞ்ஞான வீட்டுக்கு போக—யிந்த
மேல்வீடு ஏறிய யேணிப்பழுவே [சிவா] 173

யேணிப்பழுவிலே யேற—யிங்கே
எட்டு நாலெழுத்துமே யில்லையே தோழி
காணியென்ற கயிலாசம்—யிதை
கட்டியாசாழ வாங்கடி தோழி [சிவா] 174

வாங்கியும் யேங்கியும் யிருந்தால்—யிது
வம்பழிந்த சுடுகாடடி தோழி
பாங்கிமா றொன்றுமேயில்லை—யிந்த
பட்டணம் சுடுகாடு பாரடி தோழி [சிவா] 175

சுடுகாடாய்ப்போனுக்கால் சடலம்—யிது
சுத்தபரை வீடு அத்தானேமிச்சம்
யிடும்பனெல்லாம் பட்டு போவான்—யிதில்
யெந்தன் புருஷனும் சொந்தமதானன் [சிவா] 176

சொல்லாத ஞானத்தை சொல்லி—யிந்த
சூட்ச குதிரையிமேலறவும் சொல்லி
எல்லைகடந்த கருத்தை—யிங்கே
எட்டிபிடிக்கவே சொன்னேண்டி தோழி [சிவா] 177

எட்டி பிடித்தேறுமானே—யிந்த
யிமலோகம் விட்டுமேமேலேறிவா தேனே
முட்டி முட்டி தேனையுண்டு—யிந்த
முச்சந்தி வீதிவழியடி மானே [சிவா] 178

வழியடி வாய்க்குள்ளே பழக—பொல்லா
வம்பெனெல்லா மாண்டு போகுனே தோழி
யிழிவான வசனமிங்கேது—யிது
எல்லைகடந்த சுடுகாடே தோழி [சிவா] 179

எல்லைகடந்த சிவத்தை நீயும்
யெடுத்துகொள்ள ஒரு வழிபாதைகேளும்
முல்லைநிவாசம் மூக்கு—யிந்த
முனைவழி ஏறடி முச்சந்தி வீடு [சிவா] 180

முச்சந்தி வீட்டுக்கு மேலே—ஒரு
முடங்கிதெரு யொன்று யிருப்பது தோழி,
அச்சமில்லாமலே யேறும்—யிது
ஆண்டவன் சன்னதி மண்டலம் வீடு [சிவா] 181

ஆண்டவன் சன்னதி வீட்டில்—யிங்கே
ஐந்துரெண்டுவித சன்னலும் உண்டும்
மண்டல வீதியில் தங்க—யானும்
மச்சி வீடொன்றுமே கட்டினேன் தோழி [சிவா] 182

கட்டினேனண்டி யேழுமெத்தை—யிதை
கண்ணாலே பார்க்கவே முடியுமோதோழி
சட்டித்தலை பாம்புயொன்று—யிதில்
சுட்டித்தனமெல்லாம் விட்டது தோழி [சிவா[ 183

சுட்டி மனமான குறங்குப்—பாட்டை
சுகமாக நித்தம் படித்துப் படித்து
கட்டியே போடவே மாட்டான்—கீழே
கட்டுக்கட்டாகவே பாட்டைப் படிப்பான்[சிவா] 184

கட்டுக்கட்டாக படித்தால்—நீயும்
கரையேறி வருவது யெப்படி தோழி
சட்டித்தலைப்பாம்பு யுன்னை—கீழே
சாடிசாடியாக படிப்பையகாட்டும் [சிவா] 185

படிப்பாலே வருவதுயென்ன—யுந்தன்
பழய வினையெல்லாம் படிப்பையே காட்டும்
குடிப்பது கள் கஞ்சாபோலே—படிப்பு
குடிகெட்டுபோறோனே படுகுளிமாடு [சிவா] 186

படுகுழி வருமேடிமானே—நீயும்
பரமனைக்காணுமல் படித்து படித்தால்
இடிகிணறுனக்குமே சொந்தம்—நீயும்
யெப்படி அப்பனை காண்ம்படிமானே [சிவா] 187

அப்பனைகாண உபாயம்—கொஞ்சம்
அருமையாய் கேளடி அன்புள்ளமானே
இப்படி யிங்கென்று யேறும்—யிந்த
ஏக்கமும் தூக்கமும் சோதியேமானே [சிவா] 188

ஏங்கி யிழுத்தேருமானே—யிது
எட்டு நாளு வெந்த சுடுகாடு தோழி
வாங்கியே மேல்வீடுபோக—சிவன்
வாங்கி யிழுக்குமே யெந்தன் புருஷன் (சிவா) 189

சொல்லாத ஞானத்தை சொன்னேன்—புன்னை
சூட்ச குதிரையிலேறவும் சொன்னேன்
யெல்லை கடந்த சிவத்தை—நீயும்
யெட்டி பிடித்தேறி வாங்கடி தோழி (சிவா) 190

யெட்டி பிடித்தேறு மானே—யிந்த
யெமலோக வீட்டுமேலிருக்கலாந் தேனே
சட்டித் தலை பாம்பை கட்டி—போடு
சஞ்சலமில்லாத விஞ்சடி தேனே (சிவா) 191

விஞ்சை குதிரையை பாரும்—யிது
வேகமான அச்சுமட்டமே தோழி
பஞ்ச வர்ணமான குதிரை—யிதை
பத்திப்பிடித்து நீ பதறுமலேறும் (சிவா) 192

பதறுமலேறடி தேனே—யிந்த
பந்தய:குதிரையே வாங்கடி தோழி
சிதறுது மனம் புத்திமானே—யிந்த
சிங்கு வங்கென்று நீ சேறடி தோழி (சிவா) 193

பாதம் சிவமடிமானே—நீயும்
பார்த்தி படித்துதேறி வாங்கடிதேனே
காததூரமில்லே தோழி—வுந்தன்
கண்டத்திலேக் கட்டிபாரடி தோழி (சிவா) 194

என்னாலே யானது சொன்னேன்—யிதுக்
கிணையாக யாறுமே பாடாரே தோழி
முன்னும் பின்னுமாக வந்த—ரவி
முச்சந்தி வீதிலேகட்டினே தோழி (சிவா) 195

கட்டினண்டி சுத்தவாசி—யிதை
கருத்தினுலேகட் கட்டிபாரடி தோழி
மட்டில்லாப் பிரவியேடோகும்—யிது
மந்திரமான சிவதலந் தோழி (சிவா) 196

மந்திரமான தலத்தில்—யிங்கே
மானுமயிலுமே கூடிமேலாடி
உந்திக்கமலத்திலிருந்து—யிது
உதித்துவிளையாடி கின்றது தோழி (சிவா) 197

உதித்து விளையாடிவுச்சி—யிங்கே
ஓங்காரஞ்சொல்லியெ ஆடுமெதோழி
பதித்தகுளி வாசலுள்ளே—சிவன்
பாங்கான சடலமா வந்தானே தோழி (சிவா) 198

சடலமா வந்தானே சிவனும்—யிதை
சத்தியமாச் சொன்னேன் வுத்தமிவாசல்
கடம்படாதேயென்று நித்தம்—சிவன்
கண்டத்திலாடிக் கடந்தானே தோழி (சிவா) 199

கடந்தயிடத்த நீபாரும்—யிந்த
கண்டமெஞ்ஞானத்த விண்டுமே சொன்னேன்
துர்ந்தரவி மதிமானே—யிங்கே
தூங்காமல் தூங்கியே வாங்கடி தோழி (சிவா) 200

வாங்கியே வாங்கடி தோழி—யிங்கே
வானவரைக்கண்டு நேசமதாக
யேங்கியிழுத்தேருமானே—யிந்த
ஏக்கமும் தூக்கமும் ஞானண்டிதேனே (சிவா) 201

ஏக்கமுந் தூக்கமுஞ் சொல்லி—உன்னை
எட்டிப் பிடித்தேறவாவென்றும் காட்டி
நாக்கு வாய் மூக்கையுங்காட்டி—உன்னை
நாசுச்சுளி வழியேறவுஞ் சொன்னேன் (சிவா) 202

சொன்னேனடி சோதிச்சுடரை—யிதைச்
சூக்ஷமாய்க் கண்டவனெந்தன் குருவே
அன்னை பிதாவை நீ கண்டு—உன்னை
யடுத்துமேலாவேசொன்னேனடி தோழி (சிவா) 203

சொன்னேனே சன்னதி வாசல்—இந்தச்
சோதி தானேடி நமக்குப்புருடன்
சன்னதி வாசல் வழியா—யிங்கே
சந்தனக் காவுக்கு வாருங்கள் தோழி (சிவா) 204

சந்தனக் காவுக்குப்போனல்—நாமழ்
சாமி தெரிசனை பண்ணலாந் தோழி
கந்த மூலவாசம் மூக்கு—யிதைக்
கண்டு பிடித்தேறச் சொன்னேனடி தோழி (சிவா) ()

பிடித்தேரி வாருங்கள் தோழி—வுந்தன்
பிடரி வழி தாண்டி பெரும் பாதை ரோட்டு
படிப் படியாகவே யேணி—யிதில்
பக்கத்துச் சுக்கானை நேரே நிறுத்து (சிவா) 206

நேரே நிறுத்தடி மானே—யிங்கே
நீடூழி காலமும் இருக்கலாந் தேனே
வேரே கெதியேது மானே—நாமள்
வெங்கியே நாசிச் சுழி முனையாச்சே (சிவா) 207

நாசியே வாசியதாகும்—பொல்லா
நமனிருப்பெல்லாமும் நாசமாய்ப்போகும்
வாசியே கேசரமாகும்—யிந்த
வழிதுரையானதுஞ் சொன்னேண்டி தோழி (சிவா) ()

வழிதுரை யிதுதாண்டி மானே—யிங்கே
வானவரெல்லா முங் காணலாந்தோழி
இழிவான வசனமேயில்லை—யிது
யேகாந்தமான சதுரகிரியே (சிவா) 209

கிரியிலேயேரிவாமானே—யிங்கே
கிண்ணரிச் சத்தமே அத்தானே மிச்சம்
அரிவு மலம் புத்திதானே—நீயும்
ஆசானைக் கண்டுபிடித்தேறுமானே (சிவா) 210

பிடித்தேறு பித்தனைக்கண்டு—யிது
பிசகாது பிசகாது சத்தியஞ் சொன்னேன்
அடுத்துப் பழகியே வந்தால்—உந்தன்
ஆயுசு குறையாது அம்மம்மா சொன்னேன் (சிவா) 211

குறையாது குறுகாது மானே—நாமள்
கூத்துவனை யுள்ளே நிறுத்தியே வைத்தால்
வருவதும் போவதும் கட்டி—நீயும்
வங்கென்றும் சிங்கென்றும் பிறுத்தடிபாரனே (சிவா) ()

யிறுத்தடி வருத்தமே யில்லை—யிது
யெந்தன் புருடனுஞ் சொந்தமதாவான்
உருத்தாக வயதுமே கோடி—காலம்
உழியூழிகாலமும் வாழலாந் தோழி (சிவா) 213

யூழி என்று சொன்னல் கோடி—காலம்
உண்மையா சொன்னேண்டி கோடான கோடி
காளியுங்கூழியும் நடனம்—யிங்கே
கண்டத்துமேலேய் நடனமே தோழி (சிவா) 214

நடனமே பதினெட்டுராகம்—யிங்கே
நந்திக்குமேலடி கிண்ணறி சத்தம்
கடன் படாதே என்றுமேநித்தம்—நாமழ்
கண்டதது மேலடி தண்டறுவோச்சம் (சிவா) 215

தண்டறு வோச்சமே அண்டம்—நாமள்
தாயும்தகப்பனும் பண்ணிய பிண்டம்
கொண்ட கணவனே அண்டம்—என்னே
கூத்தாடி குறத்தியே பண்ணின பாண்டம் (சிவா) 216

பண்ணின மண்ணாலே கலசம்—யிதை
பற்றிய அக்கினியாலேயே சுட்டு
எண்ணு அழியாத கலசம்—யானும்
யேகாந்த விறவாலே சுட்டனே தோழி (சிவா) 217

சுட்டண்டி சட்டி வனுக்க—யிந்த
சூது அறிந்த பெரியோர்களாலே
கட்டினண்டி மேலேயேத்தி—யிதை
கண்ணாலே பார்க்கமுடியுமோ தோழி (சிவா) 218

அச்சமே யில்லடி உச்சி—யிது
அஞ்சிரெண்டுவித சன்னலே மேத்தை
கெச்சிதமான மேல்வீடில்—யிந்த
கேதாற விட்டிலே கிண்ணறி சத்தம் (சிவா) 219

கிண்ணறி சத்தமே நடனம்—யிதில்
கெடியாறம் பதினெட்டு ராகமே தோழி
உன்னறிவாலெ நீ பாறும்—யிது
உடையவன் உபதேசம் கேளடி தோழி (சிவா) 220

உடையவன் திடமாக யிருந்து—யிங்கே
உபதேசம் வா வா வென்றனே தோழி
யிடையிலே நீ விட்டு போனல்—அப்பன்
என்னதான் பண்ணுவான் யேமாழி மனமே (சிவா) 221

யேமாந்து போகாதே தோழி—அப்பன்
யெல்லாருக்கும் சொந்த புருசண்டி தோழி
காமன் கணையையறுத்து—பிங்கே
கடைத்தேறு கடைத்தேறு கண்ணுனமணியே(சிவா)()

ஆனந்த நடன மௌனமணி யெஞ்ஞானச் சுடர்

முற்றுப்பெற்றது.

---

உ

சிவமயம்.

அருளானந்தமே துணை.

# நவநீதி காண்டம் நல்ல உபதேசம்.

ஒன்றுவது மனம், கேள்பது அறிவு. சொல்வது மனமும் புத்தியும். சினேகிதன் கருத்தும் மதியும். உடன்பிறப்பு அறிவென்ற ராசா விசாரணை ஹைக்கோட்டு பஞ்சாயம்.

இந்த பூலோகத்தில் மனத்தாலும் புத்தியாலும் சூரன் தவத்தை யிழந்தான். திரியோதன் நாட்டை யிழந்தான். ராவணன் செங்கோலையிழந்தான். வாலி உடன்பிறப்பு இழந்தான். தக்கராசன் மனத்தாலும் புத்தியாலும் சடலத்தை சுடலைக்குக் கொடுத்தான்.

மனம் யென்ற திருடனுக்குப் புத்தியென்றவன் சிநேகிதன்:—இந்த யிருபேருமிந்த உலகத்தில் நேர்ந்தபடி நடந்து, இந்த உலகத்தைத் தயிர்ப்பானைபோலும் மனமும் புத்தியும் தயிர்கடைந்த மத்துப்போலும், இருந்துகொண்டு தாருமாறாக நானென்றும் நீயென்றும் பேசிக்கொண்டிருப்பதால்:—கருத்தென்ற புண்

ணிய புருஷனும் மதியென்ற தைரியமும் ஒன்று சேர்ந்து மனத்துக்கும் புத்திக்கும் ஞானத்தை உபதேசம் பண்ணினார்கள். இந்த ஞானத்தை மனமும் புத்தியும் ஞானத்தை யிகழ்ந்து நேர்ந்தபடி. பரமனைக் காணாமல்பலபல தொழில் முறைகளாகத் தனக்கென்று ஒருபயனைக் குறித்து, தகடுகட்டி பூஜைபண்ணி, கஞ்சா, கள்சாராயம், அபின் இவைகளைச் சாப்பிட்டுக் கொண்டிருப்பதால் விவகாரதிசைகள் வந்தது. என்னவென்றால் கருத்தென்ற மந்திரியும், மதியென்ற திடமும் மனத்தையும், புத்தியையும் பார்த்து; "கள், கஞ்சா, அபின், சாராயம், மற்றும் லாகிரி வஸ்துக்களையருந்தாதே, பலபல சித்து வித்தைகளான தொழில்கள் செய்யாதே. பொய்பேசாதே. கவடு சூது பண்ணாதே" என்று சொல்லிப் பார்த்தார்கள் மனமும் புத்தியும் கேட்கவேயில்லை. மனம் புத்திசெய்த அனியாயத்தால் பட்டணத்து ஜனங்களெல்லோரும் கருத்தென்றமந்திரி வசமும் மதியென்ற தைரிய லக்ஷிமியிடமும் வழக்கைத் தெரிவித்தார்கள். கருத்தென்ற புண்ணிய புருடனும் மதியென்ற தைரியமும் குடிகள் இடுக்கண்

தீர்க்கவேண்டி அறிவென்ற ராஜாவிடம் விவகாரத்தை தெரிவித்தார்கள். அறிவென்ற சீமான் உத்திரவு சொன்னது:— நம்முடைய பட்டணத்து ஜனங்கள் மந்திரி பிரதானிக ளெல்லோருக்கும் தெரிவிக்கத் தண்டோரு கொடுக்கும்படி உத்தரவு செய்தார். இந்த அறிவென்ற ராஜாவுக்கு நான்கு மந்திரி, ஐந்து பஞ்சாங்க வேதியர் எட்டு சிப்பாய்மார்கள், பன்னிரண்டுவில்லேசேவுகர்கள், பதினாறு ஆலோசனைக்காரர்கள், முப்பத்தி இரண்டு தலையாரிகள், ஐம்பத்தொரு சோசியர்கள், தொண்ணூற்றுரு படைத்தலைவர்கள், நூற்றியெட்டு தவயோகிகள், ஆயிரத்தெட்டு சமுசாரிகள், குடிகளை இவ்வளவு யென்று எண்ணமுடியாது. இப்படிப்பட்ட பட்டணத்து ஜனங்களெல்லா மொன்றுகூடப்பட்ட யிடமெது வென்றால், சூரியனும் சந்திரனு மிருக்கப்பட்ட மலைக்கு பெயரென்னவென்றால், சதகண்டமென்ற சங்கநிதி பதுமநிதிக்கு மேல்புறத்தில் மயெந்திரகிரி யென்றமலைவானத்திற்கும் பூமிக்கும்|ஒன்றாகத்தோன்றிய மலை.

இந்த மலைக்குக் கீழ்புரத்தில் சித்தமென்ற சிற்றரசன் யிருக்கப்பட்ட பட்டணத்தில் சபைகளெல்லாங் கூடும்படி தண்டோரு அறைய அறிவென்னும் அரசன் உத்திரவு செய்தார். பறைசாட்டிய சத்தம்கேட்ட ஜனங்களெல்லோரும் சிற்றரசன் இருக்கப்பட்ட சிதம்பரம் வந்து சேர்ந்தார்கள். அப்போது அறிவென்ற ராஜா வாதியையும் பிரதி வாதியையும் அழைத்து வாக்குமூலம் சொல்லும்படி ராஜாவும் சபையோரும் கேட்டார்கள். மனம் புத்தி யிருபேர்களும் பதில் சொல்கின்றார்கள். இந்த உலகத்தில் தோன்றப்பட்ட பக்ஷி பறவை, மீன், ஆடு, கோழி மற்றுமுள்ள மாமிசங்களும் கள், கஞ்சா, அபின், சாருயம் மற்றுமுள்ள போதைச் சரக்கும் யெனக்குச் சொந்தமென்றே அஞ்சாமற் பஞ்சாயத்தில் சொன்னான். அப்போது பிரதிவாதி யாகிய கருத்தும் மதியும் பஞ்சாயத்தில சொல்வது வாதியிடம்போய் கபடுவஞ்சகஞ் சூது எமாத்து அகங்காரம் பெருமை கொலை களவு இவைகளோடு சதாவும் பழகிக்கொண்டு கள், கஞ்சா, அபின், சாருயம், மாமிசம் இவைகளை நடத்திக்கொண்டு உலகத்தில்

அனியாயம் செய்கின்றார்கள் யென்று ராஜர்விடம் அறிவித்தார்கள். அப்போது அறிவென்ற ராஜா மனத்தையும் புத்தியையும் அழைத்து லாகிரி வஸ்துக்களும் ஆணவம் மதங்களும் விட்டுவிட வேண்டுமென்று உத்திரவுசெய்தார். மனமும் புத்தியும் யிருபேரும் திருத்த முடியாது யென்னுடைய சடமிவ்வளவு தைரியமாக யிருக்க நான் சகலமும் சாப்பிடுவேன். நேர்ந்தபடி நடப்பேன் என்று மீறிப்பேசினுன். அப்போது கருத்தாகிய தருமனும் மதியாகிய திடமும் சொல்வது மனம் புத்தி யிருவரும் சகலதும் சாப்பிடுவதால் இவர்கள் யேழைஜாதி யிவர்களை யெங்களோடு சேர்க்கக்கூடாது யென்று ராஜாவிடம் அறிவித்தார்கள் அப்படியே யவர்களைத் தள்ளிவிட்டு அறிவென்றராஜா கருத்தையும் மதியையும் அழைத்து நீங்கள் யிருபேரும் மதியென்ற சங்கநிதி பதுமநிதி யென்றயிடத்துக்கு மேலேயிருக்கச்சொல்லி இதற்குமேலே கடவுளாகிய அறிவு இருந்துகொண்டார். இந்த மூவரும் ஒன்றுதான் யெனக்குத்தெரியவரும். அடியேனுக்கு அடுத்த வீடுதான். இந்த மூவரும் சைவம் பிர்மம்

•

•

•

இவர்கள் பெயர் அயன்மால், ருத்திரன் யென்று உலகம் பேசும். மனமும் புத்தியும் அறிவென்ற ராஜாவிடம் அநேக வணக்கத்துடன் பணிந்து எங்களை ஜாதி விலக்கிவைக்கப்படாது யென்று அறிவென்ற ராஜாவிடம் அழுதார்கள். யெங்களை ஜாதிவிலக்கி வைத்தால் பூலோகத்துச் ஜீவகோடிகள் யாவும் எங்களை யேழைஜாதி அகலப்போடா குடிகாரப்பயல்காள் யென்று சகலகோடி ஜீவனும் யிகழும் நாங்கள் எப்படிக்கரையேறுவோம் என்று அழுதார்கள். அப்போது அறிவாகிய கடவுளுக்கு இரக்கமாகி மனத்திற்கும் புத்திக்கும் உபதேசம் சொல்லிய விபரம் எப்படி யென்றால் நீங்கள் யிருபேரும் நானென்றும் நீ யென்றும் பேசியிருப்பதால் சடலமாகத் தோன்றிய மானிடரில் பத்துப்பேரி லொருவனுக்கு சுயபுத்தியுண்டாகும். நூறுபேரிலொருவனுக்கு தருமநீதியுண்டாகும். ஆயிரம் பேரிலொருவனுக்குச் சாந்தகுணமுண்டாகும் பதினாயிரம்பேரி லொருவனுக்கு யோகம் பண்ண மனமுண்டாகும் கோடியில்ஒருவனுக்கு மனப்பூட்டுத் திறந்துகாட்டும் லச்சத்திலொருவனுக்கு அன்

டமும் பிண்டமும் ஒன்றாகத் தோன்றும் யென்று, அறிவென்ற ராஜா தீர்ப்புச்செய்தார், ராஜாவிப்படிச் சொல்லவும் அச்சங்கொண்டு சரியென்று சம்மதமானார்கள். மனத்தாலும் புத்தியாலும் உலகம் மயங்கிகிறங்கித் தியங்கித் தரித்திரப்படுகிறது. மனம் புத்தியாலே ராவணன், சூரபத்மன் திரியோதனன் முதலியோர் மாண்டார்கள்.

முதலாவது காண்டம் முற்றுப்பெற்றது.

---

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

# இரண்டாவது காண்டம்.

## ஞானபதம் ஞானிக்கு அனுபவ ரகசியம்.

## மனம் கேட்பது அறிவுசொல்வது.

இந்த பூலோகத்தில் நலமும் மிதமும் ஞானிக்கு ஞானியெடுத்துக்கொள்ள வல்லபமுண்டு. மற்ற மாந்தர்கள் சாதுக்களைத் தூஷித்து சித்து வித்தைஉண்டாவரம் சுகம் உண்டாயென்று சங்கிப்பார்கள். சித்தா

வது வித்தையாவது வாலை பூசையாவது சத்திபூசையா வது சுப்பிரமணியர் தியானமாவது அனுமார் தியான மாவது கணேசன் பூஜையாவது வாதம் வைத்திய மென்று இப்படி விரும்புவ தெல்லாங் களைக்கூத் தாடி வித்தையாகும். எட்டெழுத்தும் நாலெழுத் தும் மேலேபோகவிடாமல் இடைவழியில் அவனவன் பழவினைப் பயனுக்குத்தக்கபடி யிந்தக்கூத்தாடி வித்தை சித்திப்பாயிருக்கும். இவர்கள் எண்ணுவது நாமன் செய்கிற பூசைதான் மோக்ஷவீடு. இதற்கு அடுத்த ஞானம்கிடையாது. இதுவே பரமபதியென் றும் இதுவே முடிவான இடமென்றும் தத்துவக் குப்பையை சுமப்பார்கள். எப்படியென்றால் இதில் சொன்ன சித்து வித்தை மாணம் ஸ்தம்பனம், மோக ணம் வசியம் ஆகிருஷ்ணம் பேதனம்யென்றதெல்லாம் உலகத்தை மயக்கி நாவுக்கு உணவாக சாப்பிடவும் தன்னை உலகம் வணங்கவும்' கள்கஞ்சா சாப்பிடவும் வாதவைத்தியம் யென்று முடிவான இடம் தெரியா மல் தாம்பூரத்தை நீத்திவைத்தியமென்று பண்ணு வார்கள் ஒருவன் பொருளைப்பறித்து காகத்துக்கு

விருந்து பண்ணினுறபோல் இதிலுள்ள பலாபலன் யெப்படியாகுமென்ருல் கருமலே தேடி விறகுதலேயன் விறகுயெடுத்து சுமந்து வரும்போது அடுத்த மனி தன் அவன் சுமையைவாங்கி சுமப்பது போலேயாகும் இதனுல் மோக்ஷபதவியுண்டா வைகுண்டபதவியுண்டா தெய்வலோக பதவியுண்டா யெப்படியென்று கேட்க வேண்டும். என்னுடைய நாயகன் உலகத்தை உண்டு பண்ணி சகல உயிர்களுக்கும் மனமாகவும் புத்தியாக வும் கருத்தாகவும் மதியாகவும் அறிவாகவும் இருந்து கொண்டு கபடு சூது வஞ்சகம் குலேபாதகம் ஆண்மை அகங்காரம் பொய்வசனம் ஏமாற்று இப்படிப்பட்ட அநியாயம் ஆகாது விட்டுவிடவேண்டும். விட்டுவிடா விட்டால் கடவுள்மாத்தானுக நமக்கு சனியனென்றும் எமனென்றும் காலக்கிரகமென்றும் பொல்லாத கால னென்றும் கேது பகையென்றும் விஷமென்றும் கிராணியென்றும் குன்மவியாதியென்றும் யென்னு டைய நாயகன் வம்பனுக்கு வம்பனுகவும் அம்பனுக் குத்தகப்பனுகவும் இருந்துகொண்டு நியாயத்திற்கு நியாயமும் அநியாயத்துக்கு அநியாயமாகத் தண்டிப்

பானே. கடவுள் கொடுத்த வியாதியை நான் தீர்த்துப்போடுவேன் யென்று நாவினல் சொல்லவும் நீதியுண்டோ. ஐயோ மானிடனே நாமள் சடம் வந்த வழியைப்பார் நாமள் சடம் வந்தது யெதற்காகயென்றுயெண்ணிப்பாரும். நாமள் சடம் யெடுப்பதற்கு முன்னல் யிருந்தவீடு அக்கினிவீடாச்சே. மானிடனே வைத்தியம் பார்ப்பதெல்லாம் நாசுவன் தலைமுடியெடுத்தால் மறுநாள் தலைமுடி தழைவதுபோல பல நோய்கள்வருமே. நீ பண்ணின வைத்தியம் யெங்கே போனது நீ யெடுத்த சடத்துக்கு வைத்தியம் பண்ணிப் பிழைத்துக்கொள். ஐய்யோ மானிடனே வாசியென்ற வாசலைப் பாரு. ஆசைகொண்டு நேசமாக வேண்டும். நேசமானல் ஆசானைக்காணலாம் அங்கென்றயிடம் தங்கியிருக்கலாம் பங்கமிலாத பாவெழி உன் அங்கத்தில் அளந்துபாரும்.

இரண்டாவது காண்டம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

## மூன்றுவது காண்டம் மனம் கேட்பது.

பூமாதேவியென்ற சக்தி தன்னுடைய நாயகனு க்கு ஆசனம் போட்டு அன்னம் படைப்பது ஆத்துமா சப்ளே சாப்பாடும் மனம் கேட்பது அறிவு சொல்வது, மனமே சிரிய உபமானம் கேளும் உலகத்தில் உதயம் உதயம் மானிடர்கள் வாசல் தெளிப்பதுஎன்னுவென்று பார்த்தீர்களா அளவிட்டுத் தெளிந்தீர்களா நம்மை உண் டுபண்ணிய கடவுள் ஈரேழு பதினாலு லோகமும்புகைக் கூட்டை அக்கினி சுமந்ததுபோலெ யெங்கும் நிறைந்த சொரூபத்திற்கு நேத்திரம் சூரியனும், சந்திரனும் அக்கினியாகிய கடவுளுக்கு நேத்திரம். இவர்கள் இரு பேர்களும் நமக்கு, வலதுகண் இடதுகண்போல இரு ந்துகொண்டு பூலோகத்து ஜீவகோடிகளுக்கெல்லாம் படியளந்து போடவேண்டி நிமிஷநேரம் தாமதமில்லா மல் வருகிறுர்கள். இவர்களுக்கு உலகத்து ஜனங்கள் ஆசனம்போட்டு வணங்கி வரும் விபரம் யென்னவென்

ருல் புள்ளிமான் தோல் ஆசனத்திற்குபதிலாக காரும் பசு சாணத்தைகரைத்து புள்ளிபுள்ளியாகத்தெளித்து வாசலிலே கோலம் போட்டு அப்புறம் ஆறு, சமுத்திரம், தெப்பக்குளம் இவைகளில் ஸ்நானம்பண்ணி அறு சுவையோடும், நெய் பாலோடும் அறிவு என்ற ஆத்துமாவுக்கு சாப்பாடு சப்ளை பண்ணுவார்கள். இப்படிச் சாப்பிடுவதும் சாதம் கறி நயம் மிதம் யென்று சொல்வது யார் இப்படி சாப்பிட்டு இருந்து வயது சென்றவுடன் ஜடலத்தைப் போட்டுவிட்டு போனவன் யாரென்றும் சாப்பிடும்போது உரப்பு, தித்திப்பு, துவர்ப்பு, கைப்பு, புளிப்பு கசப்புயென்றும் ருசி பார்த்தவர் யார் யென்றும் தன்னுடைய ஜடலத்தில் அடியிலிருந்து நுனிவரையில் எண்ணி எண்ணிப்பார்த்து தெளிந்து அப்படியே சொக்குவார்கள் சித்தரும் முத்தரும் முனிவரும் யிப்படி சொக்கியவிடம் சகலகோடிபடை மன்னரும் மாண்ட படுகளும் சுடுகாடு சுத்தமான இடம் அது தானிருப்பிடம்.

மூன்றாவது காண்டம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை

## நாலாவது காண்டம்.

## மனம் கேட்பது அறிவு சொல்வது.

சூரியனும் சந்திரனும் நமக்கு உபதேசத் தீப மணித்தீபம் செவிதனில் உபதேசம். கடவுள் சூரியனாகவும் சந்திரனாகவும் மனச் சாக்ஷியாக உபதேசம் செய்துவருகிறார். மானிடனே கடவுள் இந்த பூலோகத்தை உண்டுபண்ணி சகல கோடிஜீவனுக்கும் பொதுவாக உலகத்திற்கு சொல்லி வரும் புத்தி விசாலமெப்படி யென்று கேளும். சூரியனாகவும் சந்திரனாகவும் வடிவுகொண்டு உலகத்திற்கு நியாயத்தையும் அநியாயத்தையும் சொல்லிக் காட்டாவிட்டால் பாவமும் தோஷமும் நம்மைச் சாருமேயென்று சூரியனும் சந்திரனும் உலகத்திற்கு சொல்லி வரும் உபதேச வசனம்யெப்படியென்றால் நியாயமும்அநியாய மும்யென்று இரண்டு. தர்மம் அதர்மம்யென்று இரண்டு பாவமும் புண்ணியமும் யென்று இரண்டு. நல்லது பொல்லாதது

யென்று இரண்டு. இப்படி பகுத்தறிவுக்கு யெட்டி யிருக்கிறதில் நல்லதை யெடுத்துக்கொள்ளவும் கெட்டதை விட்டு விடவும் நமக்குள்ளே மனம், புத்தி, கருத்து, மதி அறிவாக கடவுள் யிருந்து நலமும் மிதமும் கண்டு களித்து யென்னிடம் வா வா யென்று சூரியனாகவும் சந்திரனாகவும் உலகத்தாருக்கு சொல்லி காட்டும் உபதேசம் யெப்படியென்றால் சூரியன் உதயமாகிவரும் போது ஜோதியானபிரகாசம் யெப்படியோ அதுபோல் உன்னுடைய ஜடலத்திலும் சூரிய பிரகாசம் போல ஜோதி வெளிச்சமும் அக்கினிபோல் ஞானமும் இருப்பதை கண்டு என்னுடன் வா வா யென்று சூரியன் நம்மை அழைக்கிறார். சந்திரன் மேல்சொன்ன தப்பித வழி நடந்தவனுக்கு இந்தப்படி இறப்பும் பிறப்பும், மண்ணும் மலையும், உள்ளவும் ஓயாது என்றும் தேய்பிறையாகவும் வளர்பிறையாகவும் சொல்லி வருகிறார். இப்படிச் சொல்லாவிட்டால் ஜனங்களும், ஆடு மாடு மற்ற ஜீவகோடிகளெல்லாம் தரித்திரப்பட்ட பாவம் கடவுளை சாருமென்று சகலருக்கும் பொதுவாக காட்டினார்கள். இன்னமும் பலவிதமான அத்தாக்ஷி

க்கு சாஷிவளி யெப்படி யென்றால் கிரஹணம் யென்றும் ரூசி பன்னிரண்டு யென்றும் ஒன்பது நவக்கிரகம் யென்றும் இப்படி வைத்த குரிப்பு பாருவிட்டால் கடவுள் யென்னபண்ணுவார். மானிடனே பெற்ற தாய் பிள்ளைக்கு சாதத்தைப் பிசைந்து வாயில் ஊட்டுவாள். குழந்தை கக்கிவிட்டால் தாயென்னபண்ணுவாள் இது போல் தப்பித வழியை விட்டுவிடவேண்டும். நல்லவழி நடக்காவிட்டால் பழவினையோடு புதுவினையும் மென்மேலும் கருமவினைசேர்ந்தால் யெப்படி கதியடையலாம் இனிமேலாகிலும் கடவுளை நாடு சிவயோகத்தில் யேறு அங்கென்ற வீட்டைக்கட்டியிருக்க யேங்கியே சயனித்துக்கொள்ளு.

நாலாவது காண்டம் முற்றுப்பெற்றது.

---

உ

சிவமயம்.

கடவுள் துணை தருமநீதி.

## ஐந்தாவது காண்டம்.

### மனம் கேட்பது அறிவு சொல்வது.

மனதுக்கு அறிவு ஞான சடலத்தை தெரிய போதிப்பது தன்னுடைய பட்டணத்து சிறப்பு மனதுக்கு அறிவு தெரிய காட்டிய விபரம் மனமே நம்முடைய ஊரில் இரண்டு கால் கொண்ட கோபுறத்துக்கு பிணையாக இந்த பூலோகத்தில் உண்டுமோ மனமே நீ அநேகஸ்தலத்துக்கு போனதாக சொன்னுயே மற்ற சிவதலத்தில் யிப்படி இருகால் கோபுறம் நீ கண்டது உண்டோ மனமே நம்முடைய ஊரில் யிருகால் கோபுறம் யிருக்கிற லட்சணத்தை உனக்கு காட்டுகிறேன் வா. நம்முடைய ஊரில் யிருகால் கோபுறம் செம்பவும் அழகானது ஆயிரத்தியெட்டு அங்குலமும் அறுபத்திநாலு லக்ஷணமும் முப்பத்திரண்டு அழகும் பதினாரு கலையும் பத்து ஜன்னலும் பொருந்திய கோபு

றம் இதற்கு அடுத்த கீழ்புரம் பெரிய பள்ளிக்கூடமும் உண்டும். யிந்தப்பள்ளிக்கூடத்தில் அடியேன் படித்த ஞானம் சிறிய கடுகு பொலிருக்கும அடியன் படியாத ஞானம் ஏழு சத்தாசமுத்திரம் போலிருக்கும். இதில் அடியேன் இருக்கிற ஊர் யெது வென்றால் அந்தமான் பட்டணம் யென்றது நடு சமுத்திரத்தில் நடுமத்தியில் ஆகாயம் அழாவிய மலை, யிந்தமலைக்கு பெயர் யென்ன வென்றால் மாயந்திரிகிரியென்றும் சதுரகிரி யென்றும் ஆகாயம் அழாவிய மலை. இந்தமலையின் உச்சியில் வட்ட ஊரணியும் வூரணியைச்சுற்றி மா, தென்னை, கமுகு, பலாமரங்களும் சந்தணக்காவும் அடர்ந்த வனமும் யிதைச்சுற்றி வன்னிமரமும் பிச்சி யிருவாக்ஷி முல்லை ரோஜாப்பூவும் இன்னம் அநேகவித பூஞ்செடியும்உண்டும் இதில் ஏழு குகையும் உண்டும். யிந்தகுகைக்குப் போகிற வழியில் தலைவாசலும் அடுத்த பக்கம் திட்டி வாசலும் உண்டும். இதின் பக்கங்களில் இரண்டுஜன்னல் வாசல்களும் உண்டு இதில் அடியேன் இரண்டு ஜன்னலிலும்இரண்டுஅன்னப்பக்ஷிவளர்த்துக்கொண்டு வருகிறேன் இந்த இரண்டு அன்னப்பக்ஷிக்கும் தினம்

முகம் வாடாமல் இறையும்தண்ணீரும் கொடுத்து வருகிறேன். இந்த அன்னப்பக்ஷிகளில்ஒன்று ஆண் ஒன்று பேடு யென்ற பெட்டை. இந்த இரண்டு பக்ஷியும் வயது செல்லாகும் வரையில் வளர்த்து மாயேந்திரகிரிமலை உச்சியில் அடைக்கும்படி யென்னுடைய யெஜமானன் உத்திரவு. என்னுடைய யெஜமானன் பெயர் பறைசாட்டிப் பறயன் இவர் யெனக்குத் தந்தபெயர் யெப்படியென்றால் வேதாந்தபடிப்புக்கு வெட்டியானென்றும் அடியேனுக்கும் அடியேனுடைய குரு நாதனுக்கும் தினம்தினம் இந்தபறச்சேரியைச் சுத்திச் சுத்தி பறைசாட்டவும் குறைகளை நிவர்த்தியாக்கவும் வேலைச்ரியாயிருப்பதால் சும்மா இருக்க ஆசைப்படுகிறேன், மானிடரே வந்த ஜெனன வியாதிபோச்சி.

அபிந்தாவது காண்டம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

# ஆருவது நீதிவிலாச மெஞ்ஞான தீபமணி.

## மனம் கேட்பது அறிவு சொல்வது.

தன்னுடைய காயாபுரிப் பட்டணத்திலுண்டான ஜீவகோடியாவும் அங்கென்ற மடத்தில் அடக்கமான யிடம் சித்தாந்தமௌனமெஞ்ஞான திறவுகோல். தனக்குள் நமனையருத்தால் நாலுமடத்திலும் தங்கியிருந்து தன்னையறியலாகும் நாடகசாலை பூதங்கள் அதிகாரம்உலகம் மயங்கித்தியங்கி வருத்தப்படாதே மனமே நம்முடைய காயாபுரிப் பட்டணம்போலெ பூலோகம் எங்கும் சுத்திவந்தாலும்நமள்கயாபுரிப்பட்டணத்துக்குஇணையாக உண்டுமோ இந்தப் பட்டணத்தில் நாலுமடமும் உண்டும். இந்த மடங்களில் நடக்கும் அதிசயம் வாயால் சொல்லமுடியாது. வாரியாஉனக்கு காட்டுகிறேன். எந்த பெந்தமடமென்று கேட்பியோ முதலாவது நாடக சாலை மடமென்றும் பஜனை மடமென்றும் வேதாந்த

மடமென்றும் சித்தாந்த மடமென்றும் நாலுமடத்தி லும் நாலுவிதமான ஆடல் பாடல்களும் நடக்கும் பார்க்கப்பார்க்க அழகாயிருக்கும் இந்த காயாபுரிப்பட் டணத்துக்கு யிந்தமடத்தைவச்ச. வூருதான். இந்த நான்கு மடத்திலும் இருக்கிற அழகுயென்னவென்று சொல்லலாம். வாயால் இவ்வளவு அதிசயமென்று மதிக்க முடியாது .யிதுதான் நாடகசாலை. மனமே இதில் என்ன விநோதமான வேடிக்கையென்று பாறு. நாடக சாலையில் இருக்கிற சாலவித்தைகளை பார்த்தியா நானென்றும் நீயென்றும் சிகஜாலப்புறட்டும் உருட் டும் சூதும் கபடும் பலபல விஷனங்களும் பலபல ஆடல் பாடல்களும் பலபல நாடகங்களும் பலபல நழி னங்களும் பலபல பேச்சிகளும் பலபல தொழில்களும் பலபல படிப்புகளும் பலபல யெண்ணங்களும் பலபல குடிகளும் யிப்படி சாலவித்தையால் உலகம் மேலும் கீழுமாக தரித்திரப்பட்டு கிரங்கி மயங்கி தியங்கி மாண்டுபோகிறது மனமே யிதுதான் நாடகசாலை என்றது சடமிழந்த சுடுகாடு. மனமே வேதாந்த மடம்போவோம்.

வேதாந்தப்படிப்பு மும்மூர்த்தி அதிகாரம். மனமே இதுதான் வேதாந்த மடம். இந்த இடத்தில் நஞ்சுண்டகண்டனு மிருப்பான். கண்டத்து சனிசரும் மிருப்பான் மிவர்கள் பொல்லாத வம்பன்கள் மிவர்களைப்பார்க்கலாம்' வேதாந்த மடம் பார்க்கப் பார்க்க அழகாயிருக்கும். வேதாந்த மடம் பார்த்தியா மனமே அணியணியாக தீபம் பார்த்தியா. குத்து விளக்கு லக்ஷணம் பார்த்தியா பெரிய பெரிய புத்தகங்கள் மிருப்பதைப் பார்த்தியா பஞ்ச பாண்டவர்கள் வனவாசம் போகிற வழியைப்பார்த்தியா. கட்டுக்கட்டாக புத்தகம் பார்த்தியா. யோகிகள் கையேந்தி தவத்திலிருப்பதைப் பார்த்தியா. இந்த வேதாந்திகள் தவம் முடித்த பின்னுல் குளிப்பும் விபூதிப் பூச்சும் அன்ன நடயும் ஆசாரமும் பார்த்தியா. இந்த யோகிகளுத்தில் கண்டம் கண்டமாக ருத்ராக்ஷமணி கண்டத்தில் மிருப்பதும் பார்த்தியா. இந்த கண்டத்தில் சங்கதியென்ற தீர்த்தம் பார்த்தியா. இந்தத்தீர்த்தம் தேனு போலே தித்திப்பாயிருக்கும். மனமே மிந்த யோகிகள் அருந்தும் தீர்த்தம் மிதுதான் மிந்த இடத்தில்

நாவாணியும் இருப்பாள். நஞ்சுண்ட கண்டன் சகலருக்கும் புண்ணியபுருஷன். கண்டத்து சனி, ராகு, கபாட நாடகன் மனமே யிவர்கள் இருக்கிற இடம் இடஞ்சல் கடவு. இந்த இடத்தில் சகாதேவன் கயத்தால் கெட்டினான். கண்டத்து சனியனுக்குகண்ணுவிழி நிலைகுத்திபோனது சகாதேவனை காலை கய்யபிடித்து தப்பிவோடினான் விடாதே விடாதே என்று சகாதேவன் சனியனை விறட்டினயிடம் யிதுதான் மனமே. உற்றுப்பார் யிந்தப்பாதையை விடாமல் சித்தாந்த மடம் போவோம் சித்தாந்த மடத்துக்கு போகிறவழி யிதுதான் மனமே உசாருக போவோம் யேமாழிதனம் ஆகாது யேமாழிதனமாக நடந்தால் யாழி, சிங்கம் எடுத்து முழுங்கிவிடும்.

இந்த வழியில் யாழி, சிங்கம், கடுவா, புலி, வேதாளம், கறடி இவைகள் பெருத்தயிடம் பதறுமல்போக வேணும். மனமே சற்பங்கள் பனைமரம்போலும் தென்னை மரம்போலும் கிடக்கும். செத்தாலும் பிழைத்தாலும் மனத்திடமாக யேறிப்போக வேண்டும்

வாரியா என்னசொல் அறிவாகிய குருநாதா. அடிய னும் வருவேன் நீங்கள் யிருக்கையில் யெனக்குயென்ன பயம் யானும் வருவேன். சரி வா போகலாம். மன மே பயப்படாதே சேறத்தோடே சித்தாந்த மடம் போவோம். மனமே யெங்கள் பேறநார் சொல் லித்தந்தாறு வேதாந்தமடத்தை விட்டுமேலே சித்தாந்த மடத்துக்குயேரிப்போகிறவன்செத்துப்போகவேனும். இந்தப்பாழடைஞ்ச பூமியி லிருக்கப்படாது யென்று யெண்ணினவன் போகலாம். மற்ற சோம்பேரிகளெல் லாம் அறுசுவையோடேசாப்பிடநத்திக்கொண்டுவேதா ந்தமடத்திலும் பஜனை மடத்திலும் நாடக சாலையிலும் தங்கிக்கொள்வார்கள் யென்றுயெங்கள் பேறநாறுயென க்கு ஆதிகாலமே சொன்னார். கோடியிலொருவன் போக லாம். சித்தாந்த மடம் போனால் பார்க்கப் பதினாயிரம் கண்கள் வேணுமென்றும் சொன்னார். அப்பேர்ப் பட்ட கைலாசக் கொடுமுடியைப் பார்ப்போம் வாரியா. மனமே யீதுதான் சித்தாந்த மடம் அகண்டவீதி இந்த அகண்ட வீதியில் சகலகோடி ஜீவனும் தங்கி யிருக்கலாம். மனமே சித்தாந்த மடத்தைப்பார்த்தியா

காமன் யெரிவந்த யேணிப்பாதையைப் பார்த்தியா சக லகோடி கருவி கருணதி செத்து மாண்ட படுகளம் பார்த்தியா ஆசபாசம் வெந்த சுடுகாட்டைப்பார்த்தியா சகலமும்போன பாழ் வீட்டைப் பார்த்தியா புல்லு முளையாத சுடுகாட்டைப் பார்த்தியா யிதில் நாதவொலி அடிக்கிறது பார்த்தியா கணீர்க் கணீரென்றும் சலார்ச் சலாரென்றும் திடீர் திடீரென்றும் மடமடாவென்றும் மின்னலும் முழக்கமும் ஆ ஆ வென்றது தென்றல் காத்தும் வத்தாத காவேரியும் எல்லோரும் ஒன்று சேர்ந்த யெல்லைவாசலையும் பார்த்தியா முச்சந்தி வீதி யைப் பார்த்தியா முக்கோண மண்டபத்தைப் பார்த் தியா முடங்கித்தெருவையும் பார்த்தியா நாவாணி நழி னம்பார்த்தியா யிதின்பக்கத்தில் திட்டிவாசலையும்பார்த் தியா திட்டிவாசல் கதவு தலைகீழாகத்தொங்கும் பார்த் தியா. இதின் ஓரத்தில் ஒத்தக்கால் மண்டபம் பார்த் தியா. இந்த ஒத்தக்கால் மண்டபத்தைச்சுற்றி யிருக் கிற சித்தாதி சித்தரும் முத்தரும் முனிவரும் ஒத்தக் கால் தூணைப்பிடித்து சொக்கி மயங்கி கிறங்கி தூங்கா மல் தூங்கிய இடத்தைப் பார்த்தியா. மனமே கை

லாசக் கோடு முடியைப் பார்த்தியா. கடவுள் நடனம் பார்த்தியா கால்மாத்திக் கால்மாத்தி ஆடிய இடமும் பார்த்தியா. இதில் அங்கென்ற இடம் பார்த்தியா அந்தரங்க ரகசிய தெரிசனம் பார்த்தியா. நாதவிந்து வோச்சம் பார்த்தியா. விஞ்சை குதிரையைப்பார்த் தியா. இந்தக்குதிரைக்குக் கால்கள் பன்னிரெண்டு பார்த்தியா. குதிரை கெட்டின லாயத்தையும் பார்த்தியா வட்டவூரணியைப் பார்த்தியா. ஊரணி யைச்சுத்தி வன்னிமரம் பார்த்தியா. கமகமவென்ற வாசம் பார்த்தியா. நடுமத்தியில் தும்பமலரு யிருப் பிடம் பார்த்தியா அதில் கெடியாரம் அடிப்பது பார்த் தியா. சித்தாந்த மடத்தில் அத்தாமனேமிச்சம். உத் துப் பார்த்தவனே சித்தன் முத்தன் மனத்தாலெயெல் லாங்காணலாகும். மனம் சோட்டு புத்தி கிழவு சித்தம் செருப்பு கருத்து வேகம் மதிபார்வை அறிவு வெழி யான வொழிவு ஏக விதி.

ஆராவது காண்டம் முற்றுப்பெற்றது.

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

# ஏழாவது காண்டம்.

## மனம் கேப்பது அறிவு சொல்வது.

யிந்தநோயாளி தன்னையே சொல்லிக் கொள்ளுகிறான்.

### கெட்டபுத்தியால் கடவுள் தண்டனை.

நோயாளி வாயால் வரும் பழவினை ரகசிய வசனம் பூலோகம் தெரிவிப்பது முடம், குருடு, சப்பாணி, பாண்டு குஷ்டரோகம் யிப்படி வியாதியானவனுக்கு மனமே சிரிய உபமானம் உனக்கு சொல்கிறேன கேள் பெரிய பெரிய ஸ்தலங்கள்தோறும் முடவனும், குருடனும்; சப்பாணியும், குஷ்டரோகம் உடையவனும் பாண்டுவியாதி உடையவனும் யிப்படி பலவித நோய் உடையவனெல்லாம் ஸ்தலங்களிலிருந்துக்கொண்டு அவனவன் வாயில் உதயமான வசனம் பாவியென்றும் தோஷியென்றும், கருமலோபியென்றும், நான் வம்பனென்றும், மாபாவியென்றும் மகா துரோகியென்றும் சொல்லிக்கொண்டுபிச்சையெடுப்பது யென்னகாரணம் மனமேகேள் யிவங்களெல்லா முன்பிறப்பில் தீயைவை

த்தவனும் மான்மிழாவை வெடியால் சுட்டவனும் பக்ஷி களை வில்லால் தெரித்தவனும் அருவாளால் வெட்டின வனும் யிப்பிறவியில் முன்னால் தேடின பலனை யிப் போது அனுபோகம் பண்ணுகிறார்கள். அதை மற்ற மனிதர்களுக்குத் தெரிவிப்பார்கள் நாங்கள் முன்னால் நேர்ந்தபடி நிகரில்லையென்று நடந்ததுக்கு கடவுள் யெங்களை யிப்படி தண்டித்தார். நீங்கள் நல்வழி நடங் கள் என்று அவர்கள் வசயானதை உலகத்து ஜனங் களுக்கு தெரிவிப்பார்கள் யெங்களைப் பார்த்து நீங்கள் நல்லவழி நடந்துகொள்ளுங்களென்று வழியேபோகிற மனிதரிடம் தெரிவிப்பது எங்களை பார்த்து நடந்து கொள்ளுங்கள் யென்று சொல்லி பிச்சையெடுப்பது மனமே. நாமளை தண்டிக்கப்பட்ட கடவுள் நம் மோடே யிருக்கிறாரு தப்பிப் போகாதே. அறிவாகர குருநாதா யின்னம் ஒரு சந்தேகம் யிருக்கிறது அடி யனுக்கு தெரிய அறிவிக்கவேண்டும். கேள் மகனே தெரிவிப்போம் மனம்கேள்பது நம்முடையகாயாபுறிப் பட்டணத்தில் பல பல ஜாதியென்றும் சிந்தை யென்ற சித்தமும் மந்தமென்ற புத்தியும் யென்னிடத்தில் நாள்

தோறும் வாதியேபண்ணுகிறார்கள் அப்படியிருப்பதால் உனக்குத் தெரிவிப்போம் மனமே கேள். ஆதிகாலத்தில் அக்கினியான கடவுள் நாமமைை உண்டுபண்ணுகை தகாலம்கடவுளானவரு ஒருபெண்ணையும்உண்டுபண்ணி அந்த பெண்ணுக்கு மோகத்தை உண்டாக்கி இந்த மோகமும் அந்த பெண்ணும் சாதிரெண்டு யிது தவ்ற சாதி கிடையாது யிந்த பூலோகம் கவீப்பு உண்டாக வச்ச சாதி யிந்த நாலும் நாலே் வேதம் யிது ஞானிக்கிஞானி அறியலாகும். மற்ற மானிடனுக்கு தோன்றாது. மேல் சொன்ன சாதி தவற சாதி கிடையாது. யிது தவற மனத்தாலும் புத்தியாலும் உலகத்தை மயக்கி யேமாத்து செய்கிறவிதம் நான் பெரியசாதி நீ சிரியசாதி என்று உலகம் மயங்கி கிறது குதே அய்யோ அய்யோ பாவம் மானிடனே சாதிய சொல்ல கேளும் கடப்பனை, பரப்பனை, ஆறுவனை முழைப்பனை என்று நாலுவிதம் உண்டும். யிந்த நாலும் நாலு வேதமென்றே சொல்லலாம். யிந்தநாலுசாதியென்றும் சொல்லலாம். யிதுபோல நமக்குள்ளே நாலு சாதி உண்டும். யிந்த நாலு சாதியும் உன்னை ஒருவழி நடக்க

வொட்டாது: யிப்படியிருக்க நீ சாதி சாதி என்று சஞ்சலப்படாதே மனமேஉன்னிடம் பிருக்கிற சிவன் யாரு என்று பார்த்தாயா நீ செய்த புண்ணியத்தாலும் பாவத்தாலும் வரப்பட்ட கரிவி கருணை சுழை மேச்சி அடக்கிற கோணுகைவும் யிந்த கோணுளைப் போல் எத்தனை கோடி கோணுமே உண்டும் யிவனுல் ஆவதென்ன யிதுக்கு மேலான சுத்த பிர்மமும் யிருக்குது அதுவே சைவம் யிந்த சைவத்துக்கு உருப்படியுமில்லை லச்சணமும் யில்லை யிதுதான் அகண்டவிதி என்ற உலகம் வசனம் யிதுக்கு சாதிபேதுசையிவமேது பாரிசுத்தமான சுடுகாடாச்சே.

அறிவாகிய குருவே ஒரு சந்தேகம் தெரிவிக்க வேண்டும். தன்னையறிந்த ஞானிகள் இருக்கனைப்போலும் பித்தனைப்போலும் பயித்தியம்போலும் உலகத்தில் அலஞ்சி யின்னநாளையில் சமாதியாகுவேன்என்று சொல்லி சமாதி ஆகுவது ஞாயமா அல்லது.

தன்னை அறிந்த ஞானிதான் கண்ட கண்காச்சிய சகலருக்கும் தெரிவித்து காகம் அன்னம் பருந்து

உண்டாப்போலெ ஞானத்த தெரிவித்து சொல்லி சமாதியாகுவது ஞாயமா.

யிது காறியம் தெரிவிக்க மனம் கேள்பது கேள் மகனே யிந்த ஞானிகள் தான் கண்ட கண்காச்சியை உலகத்துக்கு தெரிவிப்பது கனியப்பழுத்த பிலாப்பழம் போல் எங்கும் பிறகாசமாக வாசிக்கும் யிந்தஞானிக்கு பிறவிகடன் யிப்பிறவியோடெ போயிவிட்டது யிந்த ஞானி அக்கினியோடெ அக்கியமாச்சே யிப்படி உலகத்துச்கு உபகாறம்ஆகாமலும் தன்னை அறிந்தஞானிகள் தான் கண்ட கண்காச்சிய பூலோகத்துக்கு தெரிவிக்காமல் தனே கறையேறினல் போதுமென்று பயித்தியங்கொண்டவனைப்போலும் பித்தனைப்போலும் கிருக்கனைப்போலும் பிச்சையெடுத்து சாப்பிட்டு சமாதியாகுவது எப்படியாகுமென்றால் திறவியம் உடயவன் யிடையில்வந்த திறவியத்தை யேழை பஞ்திக்கு கொடுத்துசாப்பிடாமலும் தருமம்செய்யாமலும் பணத்தை புதச்சிவச்சி பிசாசுபோல்காத்துயிருந்து யமுவினையால் நாவாணுல்பட்டு செத்தானே அதுபோலாகும் பிறருக்கு உபதேசம் பண்ணுமலும் ஞானத்தை சொல்லா

மறும் தொட்டு காட்டாமலும் சமாதியானல் மலருத காயி அரும்புக்கு சமானமாகும் பிறவி பிணியிருப்ப தால் தான் கண்ட ஞானத்தைபிறருக்கு காட்டவில்லை.

மனமே மானிடனுக பிறந்தால் தருமம் வேணும் அவசியம் யோகிஎன்று வெளியேறினல் அழுது அழுது கடவுளைக்கண்டு உலகத்துக்குதெரிவிக்கவேணும் யிந்த ரெண்டும் யில்லாதவனுக்கு மண்ணுமலையும் உள்ள அளவும் பிறப்பும் யிறப்பும் வோயாது சத்தியம்.

அறிவென்ற ராசா கேள்ப்பது ஆயுசுபெற்ற பரமசாது வுக்கிட்டகேள்ப்பது ஆயுசுபெற்ற பரமசாதுவாகியகுரு வே நீங்கள்யிருக்கிற ஆறுதானெது எந்தஆறு அறிவா கியசிடனே கேளும்அடியன் யிப்போது யிருக்கிற ஆறு எதுவென்றால்குபேறன்என்ற பட்டணத்தில் யிருக்கிற மனிதர்கள் ஒவ்வொருவனும் கோடி கோடியான திறவி யும் உடையவனுக யிருக்கப்பட்ட பட்டணம். இதில் கூலிவேலைக்காரனும் லச்சாதிபதியாக யிருக்கிறன் யிப் படிப்பட்ட பட்டணத்தில் அடியன் யிருந்த வீட்டை,

உருக்கத்தோடே கேளும் அறிவென்ற ராசனே முதலாவது அடியன் ஒண்டி குடியாக யிருந்த வீடு மனத்தாண்டி வீடு ரெண்டாவது புத்தியாண்டி வீடு மூணாவது சித்தமென்ற சித்தாண்டி வீடு நாலாவது கருத்தாண்டி வீடு அஞ்சாவது மதி வீட்டில் யிருந்தேன். ஆறாவது அறிவென்றவன் வீட்டில் யிருந்தேன் எழாவது நல்லாண்டிவீடு எட்டாவது ஞாயாதிபதிவீடு ஒன்பதாவது சத்தியவான் வீடு பத்தாவது விசுவாசி வீட்டில் யிருந்தேன் பதினொன்றாவது சிவனாண்டி வீட்டிலிருந்தேன் பனிரெண்டாவது பத்திமான் என்ற மனிதன் வீட்டிலிருந்தேன் பதிமூன்றாவதி வயிராகி யென்ற பட்டாணி வீட்டில்இருக்கிறேன் யிவ்வளவுவீடும் ஒண்டிகுடி என்று சொன்னீரே பரம சாதுவாகிய குருவே நீரும் தீர்க்காயிசு பெற்றது சரியானது சதாவும் குடியிருக்க ஒரு வீடுகட்டி யிருக்கபடாதா நீர் எப்போதும் வொண்டி குடியிருப்பு யென்று நாமள் அரண்மனைக்கி வரும்போதெல்லாம் வொண்டி குடிவொண்டி குடி என்றே சொல்லி யிருந்திரே உமக்கு வேண்டிய திறவியம் தருகிறேன் தனக்கென்று வீடு

கட்டும் அறிவென்ற ராசனே கேளும் நீ திறவியம் தந்தால் சாப்பாட்டுக்கு காணாது நீ நல்லா கொடுத்தால் பத்து கோடி திறவியம் கொடுப்பாய் யிந்த திறவியத்தால் எந்த வீட்டை கட்டலாம் அறிவென்ற ராசனே கேளும் நீ கொடுத்த திறவியம் அடியேனுக்கு அக்கினியால் வீடுகட்ட காணாது அடியன் பிறந்து யிவ்வளவு வயதுக்கு உள்ளாக தேடின திறவியத்தாலே அக்கினியாலே யேழு மெத்தை வீடு கட்டினேன் அறிவென்ற ராசனே யிந்த வீடுகட்ட திறவியம் யேது என்று கேழ்ப்பாயோ யிவ்வளவு திறவியமும் கொடுத்தவன் யாறு என்றால் நாயிபோல் சினந்த புத்தி உடயவனும் கிடா மாடுபோல் முறசு புத்திஉடையவனும் கடுவாபோல் அடித்தபுத்தி உடையவனும் பன்றிபோல அன்னம் பசுர்ந்து உண்ணுதவனும் காட்டு மிருகம் போலெ தருதாம் அறியாத மூடனும் யிப்படிப்பட்ட மனிதர்கள் தந்த பாக்கியம் யிந்த யேழுமெத்தை வீடும் கட்டினேன் யின்னமும் மேல் சிகரம் கட்ட யிருக்கிற திறவியத்தைப் பாறும் யிது தங்கம், யிது ரட்ணதி, யிது வெள்ளைக் கல்லு, யிது சிகப்பு கல்லு, யிது நீல

கல்லு, யிது கோமதேகம் பின்னம் முத்துகள் விலை மறியாத முத்துகளும் பாரும். அறிவென்ற ராசனே கேள், யிந்த திறவியம் தந்தவன் யிடும்பனும், தடிய னும், மடயனும், கபடனும், சூதனும் வம்பனுமாக தந்தான் கோடி கோடியாக அக்கினியே அகண்ட விதி கண்டத்தில் கண்ட காச்சி நீதியால் கண்டின விடு வீதி யகலம் அழியாது.

ஏழாவது காண்டம் முற்றுப்பெற்றது.

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

## எட்டாவதுகாண்டம் மனமும் புத்தியும் மனம்கேட்பது அறிவு சொல்வது

மனம் புத்தியால்வந்தசாதி என்ற சஞ்சலத்தால் உலகம் மாளுவது.

ஜாதியறியாத சண்டாளதத்துவம்
சாசுவதமான பிறம்மமே நானென்றும்
நீதியான சோதிநிலையை காணாமல்
நிச்சயம் போலவே வச்சான் பலசாதி
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா

ஜாதியும் வாதியும் சண்டாளக் கூரங்கது
ஜாதியறியாமல் சஞ்சலத்தினாலே
ஆதியும் ஜோதியும் அங்கென்றதாச்சுதே
அங்கென்ற மந்திரம் இங்கேயிருக்கவே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 1

நீதியில்லாத மனமும் புத்தியுங்கூடி
நிச்சயங்காணாமல் வச்சான் பலசாதி
ஆதியுஞ் சோதியும் அளவிட்டுப்பாராமல்
அங்கத்தாலே சாதி பங்கமாபோனானே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 2

பாவிமனக்குரங் சா்லேயே வந்தசாதி
பங்கு யிழந்தானே அங்கம் பொடியாக
ஆவியைக்கண்டு அடுத்துப்பிழையாமல்
அங்கென்ற மந்திரம் தங்கமதாச்சுதே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 3

என்சாண் உடம்பெல்லா யிசனதாச்சுதே
யினமான சாதியும் யிகத்திலே உண்டுமோ
அஞ்சாமல் வைத்திரே சஞ்சலச் சாதிகள்
அப்பனைத்தவிற யிங்கு அனுவிலும் உண்டுமோ
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 4

நானென்றும் நீயென்றும் நாட்டிலே உண்டுமோ
நாறியருலேயே கூட்டை யிழக்கிருன்
கோனுனைக்காணுமல் கொண்டான் பலசாதி
கும்பகம் சேருமல் பங்கமா போனுனே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 5

உச்சி வெழியிலே வோங்காறம் கண்டாக்கால்
அச்சமில்லாத அறனடி காணலாம்
கெச்சிதமாகவே கேதாற வீட்டிலே
வச்ச விளக்கிலே வ டாத் தீபமே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீ யல்லடா 6

வாசிச்சுழிமுனை வாசலை கண்டேறி
காசிநதியிலே காலைபிடித்தேறி
சாதி பலபல சஞ்சல அருந்தாக்கால்
நேசமதாகலா நிக்ஷயம் காணலாம்
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 7

உந்திக்கமலத்தில் வோரெழுத்தைக்கண்டு
அந்திபகலா அறனடிக் கண்டேறி
சந்திமுச்சந்திலே சாமியைக்கண்டாக்கால்
முந்தி வினாயகன் முன்னாலே தோணுமே
சாதியு நீபல்லடா மனமே சைவமு நீயல்லடா 8

அஞ்செழுத்தான அறனவே காணாமல்
கொஞ்சி விளையாடும் விஞ்சையிலேறாமல்
வஞ்சகமான மனக்குரங்காலே நீ
சஞ்சலமாகி தயங்கியே யாண்டானே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 9

பாதிக்காதத்திலே வைத்துக்கொண்டசாதி
பாங்கான சடலமும் அங்கம் பொடியாச்சு
சோதியான பரவெழியையே காணாமல்
சொல்லாலே சொல்லியே சாதி பலகோடி
சாதியு நீ யல்லடா மனமே சைவமு நீயல்லடா 10

வஞ்சகமான மனக்குரங்காலே நீ
சஞ்சலமானது சாதிபலகோடி
நெஞ்சழுத்தாலேயே நேசமில்லாதவன்
அஞ்செழுத்தாலே அநேகஞ்சாதியாச்சே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 11

நெஞ்சிக்கிமேலேயே நிச்சயம் காணமல்
வஞ்சகத்தினலே வச்சான் பலசாதி
சஞ்சல கோயிலே தள்ளாடி மாருதே
யெண்சடலமும் யேமாந்து போருனே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 12

ஓரெழுத்தான உயிரே பிடியாமல்
ஏறியிரங்கிய யீசனைக்காணமல்
வாறியமுதத்தை வாயாலே உண்ணமல்
காறியர் மாய்கையில் நத்தியபேரெல்லாம்
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 13

யீரெழுத்தானதை யெட்டிப் பிடியாமல்
மாரியிழுத்து மணிமண்ட சேருமல்
காறகழுத்திலேகட்டியும் பாருமல்
வாரியனைப்போல வம்புக்குப் பிறந்தானே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 14

உச்சி வெழியிலே வொழிந்து கொள்ளாமல்
பிச்சைபலவிதம் யேமாந்த பேரெல்லாம்
அச்சத்தைவைத்து அறனவே காணுமல்
கச்சகட்டிச்சண்டை காலனுக்காழாச்சே
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 15

ஆட்டுக்கொழுப்பெல்லா அம்பான நெய்யாச்சி
அந்தியும் சந்தியும் ஆசையனுண்டாச்சு
கட்டுக்கட்டாகவே பாட்டை படித்தாச்சு
கண்டபெரியோறை சண்டைக்குப் போயாச்சி
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 16

மாட்டுக் கொழுப்பெல்லாம் பறவிட்டு நெய்யாச்சி
மங்களமாகவே மனத்தோடே உண்டாச்சி
பாட்டுப் படிப்பாலே பரனை மறந்தாச்சி
பங்குமிழந்துமே ஆவியை விட்டாச்சி
சாதியு நீ யல்லடா மனமே சைவமு நீ யல்லடா 17

வொட்டகக் கொழுப் பெல்லா உறுதியா நெய்யாச்சி
உண்மையா யெல்லாரும் உறிசையா உண்டாச்சி
கட்டுக்கதை ஞான மெத்தப் படித்தாச்சி
காமனைச் சிந்தவே மாதரைச் சேர்த்தாச்சி
சாதியு நீ யல்லடா மன்மே சைவமு நீ யல்லடா 18

பன்றிக் கொழுப்பெல்லா குறவிட்டு நெய்யாச்சி
பார்த்த சிரியோரும் சோத்தோடே உண்டாச்சி
குன்று மலை போலே தூலம் பெருத்தாச்சி
கூத்தாடிக் கூத்தாடி மண்ணுக்குப்போயாச்சி
சாதியு நீ யல்லடா மனமே சைவமு நீ யல்லடா 19

இவ்வளவு நெய்யும் யேகமாய் உண்டாச்சி
யீன சாதியென்றும் மற்றோரை பேசியாச்சி
அவ்வு வெவ்வு அறியாமலே செத்தாச்சி
அங்காடி வீதிக்கு யேறுமல் மாண்டாச்சி
சாதியு நீ யல்லடா மனமே சைவமு நீ யல்லடா 20

நாத்த சடலத்தை நன்றாக சுமந்தாச்சி
நாம் பிறமமென்று வாயாலே பேசியாச்சி
ஊத்தை போகாமலெ தினமும் குழித்தாச்சி
உல்லாச மாகவே மாதரைச் சேர்ந்தாச்சி
சாதியு நீ யல்லடா மனமே சைவமு நீ யல்லடா 21

சுத்தங்களெ யெல்லா சுடுகாட்டு பிணமாச்சு
சூதுகவடெல்லாந் தும்ப வியாதியோ
அத்தானைக்காணுமல் அடியோடேமாண்டாச்சி
அங்காடி வீதியில் தங்காமல் செத்தாச்சி
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 23

நாம்பிரமமென்று நாடிப்படித்தாச்சி
நாறியரைக்கண்டு பின்னாலே போயாச்சி
கோணனைக்காணாமல் குடிகெட்டுச்செத்தாச்சி
கூத்தியாள் வீட்டுக்கு நாய்போல போயாச்சி
சாதியு நீயல்லடா மனமே சைவமு நீயல்லடா 23

எட்டாவது காண்டம் முற்றுப்பெற்றது.

---

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

## ஒன்பதாவது காண்டம்.

## மனம் கேப்பது அறிவு சொல்வது.

மும்மூர்த்தி நவநீதிகாண்டம் ஒரேழுத்தே ஒன்றானயிடம்

உறுதியான சுத்தப் பிரமம் உலகவெழிச்சம்.

நாசிச்சுழி முனை வாசலைக் கண்டேறி
நங்க வேறென்று யிருப்பதைத் தின்னடா
ஜாதித் துயறத்தை விட்டு அகற்றடா
சஞ்சலத்தைவிட்டு விஞ்சையில் யேறடா
ஜாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 1

விஞ்சைக் குதிரை மேலே யேறி நடங்கடா
விட்ட குறையிலே கட்டிப்பிடிங்கடா
அஞ்செழுத்தானதை நெஞ்சிலிருத்தடா
அங்காடி வீதியிலே தங்கி மேலேறடா
ஜாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 2

அஞ்செழுத்தானதை அடியோடேயருங்க்டா
அங்காடி வீதியிலே தங்கியே கூறடா
சஞ்சலக் குரங்கைச் சாடியே கொல்லடா
சாசுவதமாக யிருக்கவே வாங்கடா
ஜாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 3

ஆத்தைக்கடக்க துறையிலிருங்கடா
அந்திரமான யெழுத்தைப் பிடிங்கடா
மூத்திறக்குளியை விட்டு அகற்றடா
முத்தியான யிடம் சத்தியம் பாறடா
ஜாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 4

விக்கலும் கக்கலும் யிக்காலுமாகுண்டா
வேகாத்தலத்திலேயேறி நடத்துண்டா
அக்காலும் யிக்காலும் ஒன்று பொருந்துண்டா
அந்திறமான யெழுத்தைப் பிடிங்கடா
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 5

பார்க்க ரவி மதி சொன்னது தாண்டா
பச்சமயிலென்ற வாசியே பாறடா
கார்க்கப் பிறடி வழி யேறும் பாறடா
கண்டத்து மண்டலம் போகுமே காணடா
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 6

உச்சிவெழியான கோட்டைக்கியேருண்டா
உந்தியிலிருந்து மேலேருமே பாறடா
அச்சமில்லாத சுடுகாடே யேருண்டா
அந்திரமான யெழுத்தைப் பிடியடா
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 7

வச்ச விழக்கு சுடறது பாறடா
வாக்குள்ளே வாய் வழியாக யேறுண்டா
வஞ்சகமற்ற வழியது சொன்னண்டா
வணங்காத சனியனைக் கட்டியே கொல்லடா
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 8

தூறகடலிலே யேறி நடத்தடா
தும்பமற்ற பெரும்பாதையே ரோட்டடா
காறக்கழுத்திலே கட்டுமே பாலடா
கண்டத்து சனிராகை வெட்டியே கொல்லடா
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 9

கருங்கடல் கப்பலே போராதுப்பாறடா
காத்துக்குப் பாய்மறம் நேரே நிருத்தடா
துருசில்லா சுக்கானை சுத்தபிறயண்டா
தும்பமறற சிவயோகமே பா்றடா
சாதி யிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 10

கப்பலும் தோணியைப்பேணிய கொள்ளடா
காலு பன்னிரண்டும் யேறவே யேத்துண்டா
உப்புக்கடலே நீ தாண்டி யிருங்கடா
ஒங்காற உச்சிமலேக்கி நீயேறடா
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 11

கட்டுங்கயிற்றுக்குக் கிட்டயேடாஞானம்
காலுயீரூறுமே யேத்துமேடா மேலே
முட்டும் ரவிமதியிங்கவே பாரடா
முக்கோண வீதியிலே தங்கியேவாங்கடா
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 12

அந்திறமான யெழுத்தைப் பிடிங்கடா
அங்கென்றும் இங்கென்றும் ஆடுமேபாரடா
கந்தசடலம் கிடந்ததைப்பாரடா
கம்பத்துமேலேயே யேறுமே பாரடா
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 13

மூலகுகைவாசலுள்ளேயே யேறுண்டா
முத்திக்கு சத்தியம் உத்தமிநேசண்டா
காலைப்பிடித்துநீ மேலேயேயேரடா
கம்பத்திலேறிய கயத்தாலே கட்டுண்டா
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 14

ஊசி நுனியிலே உச்சிக்கி யேருண்டா
வோங்காரம் சொல்லியே பாங்கா அழக்கிண்டா
அச்சமில்லாத பெருஞ்சோதிதானடா
அப்பனும் அம்மையும் ஒன்றான யிடமேண்டா
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 15

நாசிச்சுழிமுனை நேசமதானக்கால்
நஞ்சுண்டகண்டனை கொஞ்சியிருக்கலாம்
ஊசிமுனையிலே யேறிமேலாடினால்
உத்தசெய்தியெல்லா சத்தியஞ் சொல்லுவாள்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 16

உற்றபிரமத்தைச் சொல்லவே கேளடா
உறுதியாய் கேளடா ஊமை மனமே நீ
அற்றயிடத்திலே யடங்கிபோனதும்
அருமையா கொஞ்சுங் கிளிமொழி தான்டா
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 17

சாதியும் சைவமும் சாற்றுகிறேன் கேளும்
சஞ்சலமில்லாத மாஞ்செடி ஜாதியே
ஆதியுமந்த்முமம் அதுவென்றும் சொல்லலாம்
அச்சமில்லாமலே கெச்சிதமானது
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 18

கொஞ்சுங்கிளியோடே கூடியிருப்போமே
கூத்தாடிக் குரங்கைவே சாதித்துக் கொல்லுவோம்
மிஞ்சியகருவிய அருத்துமேலிருப்போம்
மோலருவிடுக்கே வழிபாதை காட்டுவோம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 19

காதிலொழி கண்ணுவாசமா யிருப்போம்
கணவனைக்கண்டுமே நித்தம் பணிகுவோம்
வாதியைக் கண்டாக்கால்வதைபண்ணிக்கொல்லுவோம்
வம்பழிந்த சுடுகாட்டில்மேலிருப்போமே
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 20

நாசிச்சுழிமுனை வாசலிலிருப்போம்
நங்கவெறத்தினம் உண்மையா உண்ம்போமே
வாசிமயிலேறி நித்தம் நடப்போமே
வம்பழிந்த சுடுகாட்டுமேலிருப்போமே
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 21

சிட்டகுறையிலே யெட்டிப்பிடிப்போம்
வேகாதலத்திலே பதுங்கியிருப்போம்
அட்டாங்க யோகத்தைக் கிட்டேயேபோகம்
அடுத்த மனிதனைத் தூக்கியேசுமப்போம் .
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 22

உச்சிமலையிலே வொழிந்து கொள்ளுவோம்
வோங்காரசத்தத்தில் தூங்கியவிழிப்போம்
அச்சமில்லாமலே கெச்சிதமாகுவோம்
ஆனந்த வீட்டிலே சயனித்துக்கொள்வோம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 23

செத்த யிடத்திலே அத்தானேமிச்சண்டா
சினந்த யிடத்திலே யாறென்றுகேளடா
அத்தானைகண்டாக்கால் அங்காடி தெருவிலே
அதுவதும் இதுவதும் வொன்றாக வந்ததே
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 24

ஆசையற்றது மரஞ்செடியாச்சுதே
அதுபோல ஞானிமனமது தானாச்சே
பாசை வமக்கிது போகுமோ பாறடா
பந்து சனத்தாசை உண்டுமோ சொல்லடா
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 25

எண்ணம் பலவிதம் யிங்கேயும் உண்டுமோ
என்குலம் உன்குலம் சாதியும் எண்டுமோ
உண்ணும் உணவும் உருசையும் உண்டுமோ
உச்சி வெழியிலே வச்சவிளக்கேடா
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 26

ஒன்பதாவது காண்டம் முற்றுப்பெற்றது.

---

உ
சிவமயம்.
ஓம் பரம சற்குருவே துணை:

## பத்தாவது காண்டம் பதியவ்லெத்தி வொத்தகால் மண்டபம் உச்சிவெளித் திபம்; வொன்றே பதிமதிக்கெதி.

கப்பலுந்தோணியும் பேணியேகொள்வோம்
கண்ட பெரியோறைத் தூக்கியும் சுமப்போம்
யெப்போது யிருவேளையுண்டுமே யிருப்போம்
யெந்தன் புருஷனைக்கண்டு பணிகுவோம்
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 27

ஆணும பெண்ணுங்கூடி யொன்ருயிருப்போம்
அந்திறமான எழுத்தைப் பிடிப்போம்
கானலிலேறியே வீட்டையுங்கட்டுவோம்
கடைத்தெருவீதியில் களமரம் நாட்டுவோம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 28

மனம் புத்தி சினத்தையும் செருப்பாகக் கட்டுவோம்
மதியென்ற ரோட்டிலே போட்டு நடப்போம்
கனமான அறிவையே குடையாகப் பிடிப்போம்
காசி ஸ்தலத்துக்கு யேகி நடப்போம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 29

அஞ்சு பொறியவும் சறக்காகக் கட்டுவோம்
அச்சியில்லா வண்டிக்கு பாறமாக யேத்துவோம்
மிஞ்சிய கருவியை மாடாகக் கட்டுவோம்
மேலாரு வீட்டுக்கு யேறிநடத்துவோம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 30

கடுவாபுலியை யெல்லா வாயையுங் கட்டுவோம்
காசி நதியிலே தானங்கள் பண்ணுவோம்
திடமாகத் துப்பாக்கி நேரேபிடிப்போம்
தினம்தினம் சிவஸ்தலம் தெரிசனை பண்ணுவோம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 31

நான்னென்ற கருவியை வெட்டியே கொல்லுவோம்
நஞ்சுண்ட யிடத்திலே பழகியே யிருப்போம்
வானமும் பூமியும் ஒன்றாக மதிப்போம்
வம்பழிந்த•சுடுகாட்டிலெ யிருப்போம்
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 32

நாலெழுத்தை யெல்லாமும் நமனென்றே கொல்லுவோம்
நந்திமேலேரியே விந்தயாக நடப்போம்
கோலுக் களையொன்று மத்தியிலூ னுவோம்
கூத்தாடிக் கூத்தாடி ஆனந்தம் பாடுவோம்
சாதியிது தாண்டா மன்மே சைவமிது தாண்டா 33

மூன்றெழுத்தானதை முத்தமே கொஞ்சுவோம்
முச்சந்தி வீதியிலே களைமரம் நாட்டுவோம்
நாலெழுத்தானதை நன்றாக வெட்டுவோம்
நங்கவேறைக்கண்டு உண்டுமே சுகிப்போம்
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 34

ஈரெழுத்தானதை யெட்டியே பிடிப்போம்
யெமலோகம் விட்டுமேலேறி நடப்போம்
வோரெழுத்தானதைத் உண்டு சுகிப்போம்
உச்சிமலையிலேறி கெட்சிதமாகுவோம்
சாதியிது தாண்டா மனமே சைவமிது தாண்டா 35

உயிரெழுத்தைக்கண்டு வொன்ருகச் சேர்வோம்
ஊமை யெழுத்திலே சயனித்துத் தூங்குவோம்
கபமுன யெழுத்தலே யிழுத்துமேல் வாங்குவோம்
கணபதி வீட்டிலே குடியேரிக் கொள்வோம்
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 36

நல்ல குதிரையைச் சவ்வாரி பண்ணுவோம்
நாலு வேதத்தையும் சேணமாக பூட்டுவோம்
கல்லணையாகவே கருவியைத் தொடுப்போம்
காசி ஸ்தலத்துக்கு வேகமா வோட்டுவோம்
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 37

கருவி கருணுதியை மெத்தையாக விரிப்போம்
கடைத்தெரு வீதியிலே சயனித்துக்கொள்வோம்
உறியிலே வெண்ணையை நித்தம் திருடுவோம்
உச்சி வெ''ரியிலே வொழிந்து கொள்வோம்
சா[illegible] துதாணடா மனமே சைவமிதுதாண்டா 38

கருங்கடல் கப்பலே நேரே நடத்துவோம்
கந்தச் சடலத்தை கோட்டணம் கட்டுவோம்
வருவதும் போவதும் யேத்தி நடததுவோம்
வாசி மயிலென்று வாயாலே உண்ணுவோம்
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 39

ஊசித் துவாறத்தில் வொட்டகத்தை வோட்டுவோம்
ஊமை யெழுத்திலே யேணியைச் சாத்துவோம்
நாசிச் சுழிவழி யேறியே போகுவோம்
நஞ்சுண்ட கண்டனை பழகியே பேசுவோம்
சாதி யிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 40

சந்துத் தெருவிலே கழைமரம் நாட்டுவோம்
ஜாலவித்தையெல்லா விட்டு விறட்டுவோம்
சொந்த மனைவியிடம் சயனித்துத் தூங்குவோம்
சொல்லாத வசனத்தை யின்பமாய்க் கேளப்போம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 41

முச்சந்தித் தெருவுலே கழைக்கூத்தாடுவோம்
முடங்கித் தெருவிலே வொளிந்துகொள்வோம்
அச்சமில்லாமலே பிச்சை யெடுப்போம்
அங்காடி வீதியிலே தங்கிய நடப்போம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா 42

சண்டாளக்குரங்கையே சாதித்து வெட்டுவோம்
சைவமென்றசடத்தைச் சணத்திலே கொல்லுவோம்
மண்டல மயிலேறி வீதிகள் சுற்றுவோம்
மந்திர சிவயோகம் நித்தமும் நடத்துவோம்
சாதியிதுதான்டா மனமே சைவமிதுதாண்டா 44

யிடுக்கத்தெருவிலே யேறியே யேருவோம்
யேமாத்தும் கருவியைச் சுட்டுப்பறத்துவோம்
படுக்குஞ்சுடுகாடு யேறியே படுப்போம்
பற்றுயில்லாதயிடம் பழகியே கொள்ளுவோம்
சாதியிதுதாண்டா மனமே சைவமிதுதாண்டா

பத்தாவது காண்டம் முற்றுப் பெற்றது.

---

உ

சிவமயம்.

ஓம் பரம சற்குருவே துணை.

# மௌனம் அண்ணாமலை சாமியவர்களால் இயற்றிய,

---

## அருள்யோகத் தமிழ் மெஞ்ஞான ரத்தின தீபமணிக் கோலடி கும்மி.

அக்கினிமூலை கணபதிக்கு நாமள்
அங்கெனற மந்திர மாலையாக
தூக்கிய தொண்டை குழியிலே போட்டாடும்
தும்பி விநாயகன் காப்பாமே 1

அறசமரத்தடி நாயகண்டி யிங்கே
அங்கத்துக்குள்ளே தான் பேசுவாண்டி
சரசங்கள் மெத்தவே பண்ணுவாண்டி யிவன்
சப்பாணி தொப்பை வயறுண்டி 2

கரிமுக கணபதியாணுண்டி யிவன்
கந்த சடலம் சுமப்பாண்டி
உரியிலே வெண்ணை திருடுவாண்டி யிவன்
ஊத்த உடலைச் சுமந்தாண்டி 3

ரவிமதியாகவே நின்றுகொண்டு யிவன்
ராவும் பகலுமா வந்தாண்டி
உரியிலே வெண்ணை திருடபோயி யிவன்
உரலையும் தூக்கிச் சுமந்தாண்டி 4

நாவுக்கினிய கணபதிக்கு நாமம்
நல்லகுணத்தைக் கனியாக
ஆவுயென்று கனிநித்தம் அபிசேகம்
அப்பன் கணபதி பாருங்கடி 5

அருணைவிநாயகன் சன்னதிலே யிங்கே
ஆடி விளையாடிக் கும்மியடி
குருபரநாதன் குலைக்குள் யிருப்பாண்டி
கும்பிட்டுக் கும்மியடியுங்கடி 6

சிவ சிவா யென்றுமே பாடுங்கடி நித்தம்
சிலாம் பண்ணிக் கும்மியடியுங்கடி
அவசியமாகவே பூமாதேவிக்கி
ஆனந்த கும்மியடியுங்கடி 7

அண்ணாமலை சாமி நாதனடி நாமம்
அறிந்துக்கும்மி யடிப்போமடி
எண்ணும் பரமனை தேடுங்கடி நாமம்
ஈடேறிக் கொள்ளலாம் வாங்களடி 8

:

17/404
600 008.

அருணைமலையிலே தீபமடியிங்கே
அங்கென்றிடத்திலே சோதியடி
கருணை யிரங்கிய கருத்தனும் நம்மழை
காப்பாற்றிக் கொள்ளுவான் வாங்களடி 9

சிறு திருத்தி சிலாமும் வாங்கி நீங்கள்
சிந்தை மகிழவே ஒன்றுபோல
கூருங் குருவை யடிபணிந்து நீங்கள்
கும்மிட்டு கும்மியடியுங்கடி 10

சிவமாலை கும்மியே பாடுங்கடி மனம்
சிந்தை யுருகவெ தேடுங்கடி
சவலைக் குழந்தையாய் வாழலாண்டி யிது
சத்தியமானது முத்தியடி 11

நாலுவேதத்தை வெருப்பாண்டி கொல்லும்
நமனைக்கண்டா லருப்பாண்டி
கோலடி சத்தமாய் வந்தாண்டி யிவன்
கூத்தாடிக் கள்ளன் யிவந் தாண்டி 12

கூத்தாடிக் கள்ளனாய் வந்தாண்டி யென்னை
கொண்டகணவ னிவன்தாண்டி
மாத்து மருவில்லாச் சொதியடி யென்னை
மணம்புறிந்த திருடனடி 13

கண்டத்தைக் கட்டவே பேசுவாண்டி சிவ
கங்க நீருடி முழுகுவாண்டி
மண்டலத்தில் தீபம் ஏற்றிவைத்து நித்தம்
மந்திரம் சொல்லியடிப்பாண்டி 14

யிந்த விதத்திலெ தேகமடி ஞானம்
யிருக்குதடி மனப்பூரணமாய்
அந்திரமான எழுத்தாண்டி நம்மள்
ஆழுடிமைகொண்ட நாயகண்டி 15

இப்படியாக மறவா யிருந்தாண்டி
யேமாத்துப் பண்ணியே சொல்லுவாண்டி
தப்பிதம் தள்ளியிருங்களடி வரும்
தப்பிதமெல்லாம் சுமப்பாண்டி 16

பரப் பம்மாத்துமே போடுவாண்டி சிவன்
பத்தர்கள் பங்கிலிருப்பாண்டி
குற பாசாங்குமே செய்புவாண்டி சிவன்
கூத்தாடிக் கள்ளனிவக் தாண்டி 17

சந்தோஷமாக யிருப்பாண்டி யறை
சனநேரத்திலே சொல்லுவாண்டி
அந்தமான் தீவுக்கே தள்ளுவாண்டி சிவன்
அப்படிப்பட்ட திருடனடி 18

சிவனில்லாவிட்டால் சத்தியேது சத்தி
சுகமில்லாவிட்டால் சனம்மேது
செகமெல்லாம் தானாக நின்றுகொண்டு சிவன்
செங்கோல் செலுத்துவான் கோனானடி 19

கோனானில்லாவிட்டால் குட்டியுண்டோ சிவன்
குட்டியில்லாவிட்டால் பெருக்குமுண்டோ
அவனில்லாவிட்டால் யாருமேது யிதை
அறிந்துகும்மி யடியுங்கடி 20

மண்ணு மலையாக வந்தாண்டி யிந்த
மண்டல ஈரேழு மானானடி
உண்ணும் உணவாயிருந்து கொண்டு இந்த
உலகத்தைக்கட்டி மேலாளுவாண்டி 21

அல்லாக்கணக்கும் அவன்தாண்டி யிதை
அம்மம்மா அம்மம்மா யென்னசொல்வேன்
உல்லாசமாகவே உடலை சுமந்துமே
உண்டு சுகித்துமே கொண்டாண்டி 22

உணவு தித்திப்பு உறப்பு புளிப்பு
உணவு யாரென்று பாருங்கடி
கணவன்போலே யிருந்துகொண்டு யென்னை
கட்டி உதைக்கிறான் பாருங்கடி 23

கள்ளத்தனமெல்லாம் கருத்தனடி என்னால்
காணி மாகாணியும் யில்லையடி
எள்ளுக்குள் யெண்ணேயாயிருந்துகொண்டு யென்னே
ஏங்கியடித்து உதைக்கிறாண்டி 24

என்மனம்புத்தி கருத்து அரிவெல்லாம்
ஏண்சானுடம்பெல்லா ஈசனுச்சே
அன்னேயும் பிதாவும் யிங்கே யிருந்துமே
அலங்கோலஞ் செய்யவும் நீதியுண்டோ 25

சொல்லடியம்மா மகமாயி அப்பன்
சூதண்டி பக்காத் திருடனடி
கல்லாத முடனைப் வைத்துக்கொண்டு என்னே
கந்ததுணியாக வாட்டுறாண்டி 26

எள்ளளவாகிலும் யிங்கேயுண்டாக்கவே
என்னாலேயாகுமோ காயக்கும்மி
கள்ளத்தனமெல்லாம் கடவுளன்றி யிங்கே
காணிமாகாணி நடவாதடி 27

என்னையைக்கட்டியே வந்தாண்டி யெனக்
கேத்தகணவன் புருஷன்தாண்டி
முன்னேயே வாவென்று போவாண்டி அந்த
மூச்சந்தி வீதிமேலே வைத்தாண்டி 28

முச்சந்தி தெருவிலே யாஞெருத்தியாக
முக்காடு போட்டுமே யிருந்தேனடி
அச்சமில்லாமலே என்புருஷன் வந்து
அங்காடி வீதிக்கே யேற்றிஞண்டி 29

ஏற்றிஞண்டி அண்டயுச்சிமலை சிவன்
என்னோடிருந்துமே யுண்டானடி
மாத்து மருவில்லா என்புருஷன் விட்டு
மாகாணிநேரம் பிரியாண்டி 30

ஆண்டவன் நம்பளைத் திஷ்டித்தாண்டி சிவன்
ஐந்துபோகவே பண்ணிஞண்டி
பண்டம் பலகோடியுண்டாக்கி சிவன்
பசிபோலேதின்று சுகித்தாண்டி 31

பன்றிக்கிரைகல் தேனுபோலே சிவன்
பலகோடி உயிரெல்லாம் ஒன்றுக்கொன்று
கொன்றுமே தின்றுயிருப்பாண்டி யிந்த
கூத்துவன் தின்று சுகிக்காண்டி 32

தின்றுசுகிக்காண்டி அண்டசராசரம்
தேசமீரேழு புவனமெல்லாம்
கண்டு பிடிக்கவே வேணுமடியிந்த
கடவுள்தானடி காயச்சடம் 33

காயச்சடமாக வந்தாண்டி சிறு
கன்னிவயதிலே கட்டினுண்டி
மாயப்பொடிமருந் திட்டாண்டி சிவன்
மந்திரக்கள்ளன் மாயாண்டியடி 34

திருட்டுத்தனமெல்லாம் செய்புவாண்டி சிவன்
தேகம்ஜடமாக வந்தாண்டி
காட்டுக்காட்டென் றிழுப்பாண்டி சிவன்
கட்டையை போட்டிட்டேப் போவாண்டி 35

இப்படிப்பட்ட திருடனடி சிவன்
எல்லாத்தையு மேய்த்துப்போட்டாண்டி
அப்படிஇப்படி பேசாதடி பாரம்
அவன் தலையிலே ஏற்றுங்கடி 36

ஏற்றுங்கடியண்ட வுச்சிமலைசிவன்
எல்லாம்சுமப்பான் கிருக்கனடி
மாற்றுங்கடிகாலை தூக்கியேத்தி சிவன்
மாறுச்சிரஞ்சீவி நாங்களடி 37

வாய்க்குள்ளே வாய் ஆறுபாருங்கடி நீயும்
வாசிமயிலுமேமேலே ருங்கடி
காயிபழுத்து கனியாகும் இதை
கண்டுதெளிந்து மேமேலருங்கடி 38

வந்ததும் போனதும் வாதமடியிதை
வானவரெல்லா மேலுண்டாறடி
சொர்த்தமணவாளன் எந்தன் புருஷனும்
சூக்ஷக் குதிரையிலேத்துவாண்டி 39

சூக்ஷக் குதிரைக்கு நாலுகாலு யிது
சொல்லித் துலேயாது யெட்டுக்காலும்
சாக்ஷியாய் நின்ற சிவபெருமானுக்கு
சத்தியமானது அக்காலடி 40

அக்காமகளாய் மருமகளும் யிது
ஆறுக்கும் எட்டாது கிட்டயடி
விக்கலும் கக்கலும் ஒன்றானயிடம்
விட்டவிடமடி காயக்கும்மி 41

கும்மியடிங்கடி கையைக்கொட்டி நீங்கள்
கூத்தாடியைகண்ட மையலிலே
ஆமிந்தகும்மியே ஞானமடியிது
அப்பனும் அம்மையும் நாமமடி 42

ஆச்சுது போச்சுது என்றார்கள் வயது
அற்றவிடந்தாண்டி விட்டயிடம்
காச்சி பூச்சி என்றழுதார்கள் சிவன்
கண்டத்து மண்டலம் போறனடி 43

ஏரிஇரங்கிய வாசலடியிது
எட்டுநாலும் கொண்ட அச்சுமட்டம்
மாரியிழுத்து கயற்றுலேகட்டினல்
மட்டுப்படுமடி காயக்கும்மி 44

கட்டுப்படும் குகைவாசலுக்குள்ளடி
கந்தைச்சடலம் இருக்கையிலே
முட்டி விளையாடும் முக்கோண வீதியில்
முத்தரும் சித்தரும் கட்டினுறே 45

கட்டினகட்டு சகாதேவன் சிவன்
கந்தைச்சடலம் சுமந்தவனே
முட்டித்ததும்பியே எட்டிப்பார்த்து சிவன்
மூக்காலும் அக்காலும் கட்டினனே 46

எட்டுத்திசையு பதினறுகோணமும்
எந்தன் புருஷனும் கண்டத்திலே
கட்டியடித்தானே நல்ல சிவனுண்டி
கட்டையைப் போட்டிட்டே போனனடி 47

என்னலேயானதும் சொன்னேனடியிது
எணை இங்கு ஒன்றும்மேஇல்லையடி
முன்னலேமுத்தியடைந்த பெரியோர்கள்
மூச்சந்தி முக்கோண வீதியடி 48

முக்கோண வீதியில் அக்காலேநாட்டிய
மூக்குசுழி முனைவாசலேறி
பக்ஷத்திருடனைக் கட்டியேபோடலாம்
பார்த்துப்படியேறு காயக்கும்மி 49

காயக்கும்மி தன்னைப் பாடுங்கடிகாலே
கூட்டிக் கூட்டிமேலாடுங்கடி
மாயப்பொடிபோட்ட மாயனுஅயனும்
மறித்துக் கட்டலாம் வாங்களடி 50

விள்ளாத ஞானத்தை விண்டுசொன்னார் நமள்
விஞ்சை மந்திரத்தைக் காணச்சொன்னார்
கள்ளக்கணக்கு எழுதாசைப்பட்டவன்
கவட்டுத்தோலடா குட்டமாம் 51

கபடுசூதுமே லெண்ணுதடி நீயும்
கள்ளக்கணக்கு எழுதாதடி
அபகேடுஅரச் சணத்திலேவந்துன்னை
அடியோடே கொண்டுபோகுமடி 52

அல்லாக்கணக்கும் இதுதாண்டி இதை
அம்மம்மா அம்மம்மா யென்ன சொல்வேன்
எல்லேதெரியாமல் ஓடியலேந்துமே
மொர்ந்து போகாதே காயக்கும்மி 53

ஏமாந்துப்போனால் நரகமடி யிதை
எட்டுநாலுங்கூடி கொல்லுமடி
மாமன் மகளென்று நம்பி நம்பி யிவன்
மண்ணுக்கிறையடி காயக்கும்மி 54

சாக்ஷிக்குச் சாக்ஷியாய் சொன்னேனடி யிது
சத்தியம் சத்தியம் உண்மையடி
சாக்ஷியாய் நின்ற சிவபெருமானை
சத்தியால் முத்தியடையலாண்டி 55

இரவும் பகலுமாய் வந்தாண்டி யிவன்
என்னோடிருந்துமே உண்டாண்டி
கரகம் கும்பம்வைத்து ஆடுவாண்டி யிவன்
கந்தனுக்கு நேரேமூத்தவண்டி 56

அண்டமும் பிண்டமும் பாருங்கடி கொஞ்சம்
கண்டங்கறுத்தானை காணுங்கடி
பிண்டமாய் வந்து பிறந்து விளையாடும்
பித்தனை நீயுள்ளே பாருங்கடி 57

ஆணொன்றும் பெண்ணொன்றும் வந்தாண்டி யிவன்
அந்திரமான எழுத்தாண்டி
காணொன்ற காமனாய் வந்தாண்டி யிவன்
கள்ளன் திருடன் யிவந்தாண்டி 58

அப்பனும் அம்மையாய் வந்தாண்டியிவன்
அண்டயுச்சிமலை ஆண்டாண்டி
ஒப்பிய என்னைக் கட்டினுண்டி என்னை
ஒத்தையிலே வைத்துப்பார்த்தாண்டி 59

கள்ளத்தனம்மெத்தப் பண்ணுவாண்டி யிவன்
கஞ்சாவும் கள்ளுமே கொள்ளுவாண்டி
முள்ளுமுனையிலே ஏறச்சொல்லி இவன்
முக்கோண வீதியிருப்பாண்டி 60

முக்கோண வீதியிலிருப்பாண்டி இவன்
மூக்குனுனிவழி ஏறுவாண்டி
அக்கோண உச்சிமலை மீதிலிவன்
அப்பனும் அம்மையாய் ஆனுண்டி 61

அப்பனும் அம்மையாய் நின்றுகொண்டு யிவன்
அங்கும்ஜடமாக வந்தாண்டி
இப்பவே மாமன் மகளாக யிவன்
யிணங்கி விளையாடிக் கொண்டாண்டி 62

கீழுமேலுமாக ஓடுவாண்டி யிவன்
கேதாரமேலே இருப்பாண்டி
பாழான முப்பாழை தாண்டுவாண்டி யிவன்
பார்க்க ரவிமதியானுண்டி 63

உச்சி நுனியிலே யேறுவாண்டி யிவன்
ஒத்தக்காலென்று போராண்டி
பாசிகள் கட்டும் கழுத்திலே நின்றுவன்
பார்க்க ரவிமதியானுண்டி 64

ஐந்துவயதிலும் போவாண்டியிவன்
அடுத்தப்பேறை கெடுப்பாண்டி
பஞ்சபேர்களையெல்லாம் கொல்லுவாண்டி யிவன்
படிப்படியாகவே ஏத்துவாண்டி 65

ஏழாங்கு மேத்தை வீடுதாண்டி யிது
எட்டுத்திசை கட்டியாளுமடி
கோழாவாசி மலையிலேறி யென்னை
கொண்ட கணவனை பாறுங்கடி 66

பாருங்கடி உச்சி ஏறுங்கடி யிந்த
பாதை பெரும்பாதை யேருங்கடி
காருங்கடி யிந்த வாசலேழும் யிது
கண்டத்து மண்டலம் ஏறுங்கடி 67

கோபுர வாசலும் ரெண்டுதாண்டி யிதில்
கொட்டார வாசலும் ஒன்றுதாண்டி
மாமரம் தென்னை கமுகு பிலாமரம்
மகத்தான வாசலை பாருங்கடி 68

மானும் மயிலும் உலாவிருக்கும் யிந்த
மந்திரமான சிவதலத்தில்
கானு மயிலும் கலந்து விளையாடும்
கண்டத்து மண்டலம் பாருங்கடி 69

வந்ததும் போனதும் பாருங்கடி யிந்த
வாயின் ருசியாரு காணுங்கடி
சொந்தச் சடலம் யிருக்கும்போதே நீங்கள்
சூக்ஷ குதிரையில் ஏறுங்கடி 70

சூக்ஷ குதிரைக்கு நாலுகாலாம் இங்கே
சொல்லதுலையாது எட்டுக்காலும்
சாக்ஷியாய் நின்ற சிவபெருமானுக்கு
சத்தியமானது ஒற்றக்காலே 71

ஒற்றககாலாலே நிற்பாண்டி இவன்
ஊமையனென்றுமே பேருண்டி
தத்திமியென்றுமே ஆடுவாண்டியிவன்
தள்ளாடி தள்ளாடிகள்னடி. (72)

மத்தாளம் தித்தியடிப்பாண்டி யிவன்
மாமிமகளாக வந்தாண்டி
கூத்தாடிக் கூத்தாடிக்கொள்வாண்டி
என்னை கொண்ட கணவன் இவன்தாண்டி. (73)

தப்புத்தவலை யடிப்பாண்டி யிவன்
தள்ளாடித்தள்ளாடிகள்ளனடி
உப்புப்பொதியுமே ஓங்காரசத்தமும்
உத்தசிவனும் இவன்தாண்டி. (74)

எல்லாஉயிரும் இவன்தாண்டி நம்மை
ஏமாற்று மெத்ததவே பண்ணுவாண்டி
மல்லுக்கட்டிமெத்த மாளும்படி யிவன்
மடியைப்பிடித்து அடிப்பாண்டி. (75)

கூத்தாடிக்குடிசைக்குப் போவாண்டி யிவன்
கோப்பாளக்காரன் சிவனாண்டி
வாத்தாடி வயது பெண்களைகண்டுவன்
லலிய விளையாடிக் கொள்ளுவாண்டி. (76)

நாலு வேதமாக நின்றாடி யிவன்
நாடெங்கும் தாளுகிக்கொண்டாண்டி
காலு பன்னிரெண்டாய் வந்து விளையாடி
கட்டாதகாளை யிவந்தாண்டி. (77)

மூலமுக்கோணமாய் வந்தாண்டி யிவன்
முச்சந்திதே ரோடும் வீதியாண்டி
சாலவட்ட வீட்டிலிருப்பாண்டி யிவன்
சத்திபத்திலொரு முத்தனடி (78)

கண்டுபிடிக்கவே எட்டாண்டி யிவனை
கட்டும் தயட்துக்கு கிட்டையடி
மன்றுகனிரயிலே ஞயாயம் பேசி யிவன்
மதியறிவுயிவந்தாண்டி. (79)

எட்டுத்திசையும் பதினாறு கோணமும்
ஏகபெருவெழி யாக நின்று
கட்டயனென்ற கருக்குழிக்குள்ளே
கணே சனிருப்பிடம் பாருங்கடி. (89

முச்சந்தி வீதியிலிருப்பாண்டி யிவன்
முத்திக்கு வித்து விநாய கண்டி
சத்திக்கணபதி முக்கோணவீதிலிவன்
சார்ந்த குணமாக வந்தாண்டி. (81)

கும்மியடிங்கடி அம்பலத்தில் நமள்
கூத்தாடியைக்கண்டு போற்றுங்கடி
ஆமிந்தச்சடல விட்டுக்குள்ளே நீங்கள்
யடங்கிக்கும்மியடியுங்கடி. (82)

பாசாங்கு மெத்தயே போடுவாண்டி யிவன்
பய்யப்பய்யவந்துக் கூடுவாண்டி
மோசமில்லாத கடவுளடி சிவன்
மூக்கு முனையிலே நிற்பாண்டி 83

சூரியனாகவும் வந்தாண்டி நமள்
சொன்னகனியெல்லாம் தந்தாண்டி
காரியமான கருத்தனடி இவன்
கண்டத்திலாடும் கடவுளடி 84

சாக்ஷிக்கு சாக்ஷியாய் நிற்பாண்டி யிவன்
சத்தியத்திலொரு மித்திரண்டி
சூக்ஷ்மமான சிவன்தாண்டி நாமள்
சும்மாயிருந்த குணந்தாண்டி 85

பாருங்கடி கட்டி எருங்கடி யிந்த
பரமசிவன்கோவி லேருங்கடி
நாரும்பூவுமாகி நாமளிடத்திலே
நாலேசாதியாக நின்றாரடி 86

நாலேசாதியும் நாலேவேதமிது
நாமளைவிட்டு அகலவில்லை
காலுதெரியாத மாந்தர்கள் வைத்தது
கட்டுக்கதைச் சாதிவேதங்கோடி 87

கட்டுக்கதைவேதம் நில்லாது யிது
காலனைக்கண்டால் பதுங்கி ஓடும்
ஆட்டுக்காலுமே இரண்டானதுபோலே
அத்திரமான இடந்தாண்டி 88

அந்திரமான வெழுத்துக்களெல்லாமும்
அக்கினிமூலைக் கணேசனடி
தந்திரமான் சதுரகிரியிலே
தானே முளைத்து வளருந்தாண்டி 89

எந்தன் சடலமா தேவாதி தேவர்கள்
எப்போதும் வீற்று யிருப்பாரடி
சொந்தச் சடலமாய் தான்சுமந்து நம்மை
சும்மாயிருத்தியெ வைப்பாரடி 90

வைப்பாரடி நாமள் அப்பனும் அம்மையும்
வாய்க்குள்ளே வாயாயிருப்பானடி
முப்பாழுக்கப்பாலே ஏரிவிளையாடி
மூக்கு நுனியிலே நின்றுறடி 91

கண்ணில் கண்டது சொன்னேனடி ஞானம்
கண்டுமேலுண்டவன். தேவனடி
விண்ணுமண்ணிழந்த தேவாதிதேவர்கள்
விஞ்சை மந்திரமிதுதாண்டி 92

மனம் புத்தியாகவே வந்தாண்டி யிவன்
மாற்றுமருவில்லாச் சோதியடி
தினம் தினமுமே தின்பாண்டி யிவன்
இட்டிவாசல் வழியேருவாண்டி 93

கூத்துக்குப்பந்தம் பிடிப்பாண்டி யிவன்
கோமாட்டி யெச்சுமே தின்றாண்டி
பார்த்துப் படியேரி மேலெயே வாவென்று
பத்ததரைமேலேயே ஏத்துவான்டி 94

கரிமுகனொன்றுமே பெயராண்டி யிவன்
கந்தச் சடலம் சுமப்பாண்டி
முருகிமுக்கோண வீதிக்குள்ளேயிவன்
முட்டி விளையாடி நிற்பாண்டி 95

காமன்கணையாக வந்தாண்டி யிவன்
கண்டபேருக்கெல்லாம் பெண்டுதாண்டி
மாமன் மச்சானுக வந்தாண்டி யிவன்
மாம்பழக் கள்ளன் இவன்தாண்டி 96

தூராதிதூரமும் யில்லையடி உந்தன்
தொண்டைக்கு மேலேழு வாசலடி
கார்வண்ணன் தேவியாம் லக்ஷிமியாம் யிவள்
கண்டபேருக்கெல்லாம் பெண்டுதாண்டி 97

காமாக்ஷி என்றொரு கன்னியடி யிவள்
காமன் கணைக்கு ஆதிகாரி
மாமன் மகளாய் பூலோகத்திலே நின்று
மய்யலு கொண்டாளே பாருங்கடி 98

காருங்கடி கட்டி ஏருங்கடி யிந்த
காயச்சட்டவும் யிருக்கும்போதே
கூறுங்கடிகும்ப மா முனிதெப்பக்
குளமிருக்குது பாருங்கடி 99

வாருங்கடி பெண்காள் வாருங்கடி நாமள்
வாசலிலே திட்டிவாசலுண்டும்
ஏறுங்கடி பெண்காள் ஏறுங்கடியிது
எட்டுநாளும் போகும் வாங்களடி 100

பீசமாக எங்கும் நின்றாண்டி பெரும்
பித்தனென்ற பெரும் பித்தனடி
காயசமென்ற கபடனடி யிவன்
கண்டத்திலாடுங் கடவுளடி 101

பிச்சி மலராக வாசமடி யிவன்
பின்னுமுன்னுமாக லேறுவாணடி
அச்சமில்லாத கிருக்கனடி யவன்
ஆரையும் கண்டாக்கால் பேசானடி 102

கூத்தாடி கம்பத்திலேறுவாண்டி யிவன்
கொங்கணனவன் பித்தனடி
காத்தவராயக் கண்டவந்தாண்டி யவன்
கண்டபேருக்கெல்லாம் பெண்டுதாண்டி 103

பார்த்தாரைப் பார்த்து யிருப்பாண்டி யிவன்
பய்யப் பய்யக்கிட்டி போடுவாண்டி
சோத்து மடையன் யிவன்தாண்டி யிவன்
சொன்ன வசன மெஞ்ஞானமடி 104

கட்டாத காமனை கட்டுவாண்டி யிவன்
கங்கை நீராடி முழுகுவாண்டி
முட்டாத மாடாக முட்டுவாண்டி யிவன்
முக்கோண வீதியிலிருப்பாண்டி 105

சுட்டித்தனமெத்தப் பண்ணுவாண்டி யிவன்
சுப்பிரமணியனாக வந்தாண்டி
சட்டித்தலைப் பாம்பை சுடிமேலாடியே
சந்திமுக்கோண மிருப்பாண்டி 106

பித்தனாக யிங்கே வந்தவண்டி யிவன்
பிடரி வழிமேலே ஏறுவாண்டி
மாத்திரைநேரம் விலகாமல் நின்று
மனிதரோடே யிருப்பாண்டி 107

நாவுக்கினிய கனியாண்டி யிவன்
நல்லவருக்கெல்லாம் தோணுவாண்டி
கூவுமயிலாயிருப்பாண்டி யிவன்
குலைக்குள்ளே நின்று பேசுவாண்டி 108

எட்டாத கொம்பிலிருப்பாண்டி யிவன்
ஏமாற்று பண்ணுந் திருடனடி
கட்டாயமாகவே முக்கோண வீதியில்
கட்டியே போடலாம் வாங்களடி 109

இப்படிப்பட்ட திருடனடி யிவன்
எல்லோரையும் எச்சிப் பார்ப்பானடி
முப்பாளை தாண்டியே முத்தரும் சித்தரும்
முக்கோண வீதியில் கட்டினரே 110

கட்டி அடித்தானே நல்லபிள்ளை யிவன்
காண்டிபன தம்பி சகாதேவன்
முட்டித் துதம்பியை பார்த்தாண்டி யிவன்
முனனாலே வந்துமே கெஞ்சினாண்டி 111

கெஞ்சினக்கால் யிவன் மிஞ்சுவாண்டி யிவன்
கேதாரமேலே யிருந்து கொண்டு
மிஞ்சினல் கெஞ்சவருவாண்டி யிவன்
மெத்தப் பயித்திய சுத்தனடி 112

சுத்தமான பெருஞ் ஜோதியடி யிவன்
சொல்லுக்கு எட்டாத முத்தனடி
சத்துரு வந்தாலும் கொல்லுவாண்டி யிவன்
சந்தேகமில்லடி விந்துநாதம் 113

ஆதியும் ஜோதியும் ரெண்டுதானே பரை
அந்த விந்துநாதம் யாந்தானே
சாதிநாலுங்கூடி ரெண்டே சாதியிது
சத்தியமானது ஒரே ஜாதி 114

குட்டியு ஆடுமே ஒன்றுகூடி யிந்த
கூட்டுக் கிளியை அடைத்துவைத்து
ஆட்டுக்கிடா ரெண்டும் பாய்ச்சலும் பாயுமே
அந்த யிடந்தாண்டி திட்டி வாசல் 114

அந்திரமான எழுத்தாண்டி நம்மை
அடக்கியாளும் வகைகேளும்
தந்திரமான சரீரத்துக்குள்ளே நீ
தனித்துக் கும்மி யடியுங்கடி 115

விள்ளாத ஞானத்தை விண்டு சொன்னேன் நாமள்
வேம்படி நாயகன் நாமளடி
கள்ளத்தலத்தை விடவே சொன்னேன் யிதை
கண்டு தெளிந்தவன் நாதனடி 116

உன்னையே கண்டு தெளியச்சொன்னேன் நித்தம்
உணவு யாரென்று காணச்சொன்னேன்
முன்னையும் பின்னையும் வாங்கியே மேல்வீடு
மூக்குநுனி பெரும் பாதையடி 117

பாதையடி பெரும் பாதையடி யிதில்
பட்டணம் ஏறவே ரோட்டுத்தாண்டி
கீர்த்தமும் தூரமும் யில்லையடி உந்தன்
கண்டத்து மேலேழு வாசலடி 118

முன்னேயே முப்பாழைத் தாண்டச்சொன்னேன் நித்தம்
முக்கோண வீதியில் தங்கச்சொன்னேன்
அன்னையும் பிதாவும் ஒன்றானயிடம்
அறிந்து கும்மி யடியுங்கடி 119

காயக்கும்மிதமிழ் பாடுங்கடி வரும்
கரும வினையெல்லா வோட்டுங்கடி
ஆயினும் மாயினும் ஒன்றான யிடம்
அறிந்து கும்மி யடியுங்கடி 120

இங்கென்றும் அங்கென்றும் பாடுங்கடி கும்மி
இமலோக வீட்டுமேலேறுங்கடி
அங்கமே தங்கமாப் பொங்குமடி யிது
ஆளும் சிறஞ்சீவி வாங்களடி 121

பங்கமில்லாத சிறஞ்சீவியே யிதை
பார்த்தனிலே யாரும் சொல்லாரடி
அங்கத்தை தங்கமா பண்ணுமடி யிது
அப்பனருளாலே சொன்னேனடி 122

கண்ணினால் கண்டது சொன்னேனடி ஞானம்
கள்ளத்தனமாகச் சொல்லவில்லை
எண்ணும் பரமனை தேடித்தேடி பெண்கள்,
யேங்கி கும்மி யடியுங்கடி 123

ஏக்கமுந் தூக்கமும் ஞானந்தாண்டி கும்மி
இதுக்குமேலொன்றுமே யில்லையடி
ஆக்கைஜடம் விட்டு ஆத்துமா போகுமே
அந்தவிடந்தாண்டி ஞான வீடு 124

வீடுதாண்டி ஞானமெத்தை வீடு ஏழு
வீதிக்கு வீதியாம் சன்னல் வாசல்
பாடுபட்ட பெரியோர்களுக்கு யிது
பஞ்சணை மெத்தை சுடுகாடு 125

மாமயிலேறியே வாங்களடி யிந்த
மந்திகமான சிவதலத்தில்
காமன் கணையாக வந்த கடவுளை
கட்டியே போடலாம் வாங்களடி 126

கட்டாத காமனை கட்டலாண்டி சிவ
கங்கை நீராடி முழுகலாண்டி
எட்டாத கனியும் கிட்டுமேடி நாமன்
என்னும் சிரஞ்சீவி வாங்களடி 127

பிச்சி மலருபோல் வாசமடி சிவன்
பின்னாலே ஏறினால் னேசமடி
அசயில்லாத கடவுளடி யிது
அங்காடி வீதிக்குள் வாசலடி 128

வீதிக்கு வீதியாம் சன்னல் வாசல் யிதில்
விஞ்சை குதிரையாம் அச்சு மட்டம்
சாதி குதிரைக்கி பன்னிரண்டு காலு
சந்தணக்காவு லயந்தாண்டி 129

சந்தணகர்வுக்கு போவமடி நாமள்
சாமி தெரிசனைப் பண்ணலாண்டி
சொந்த மணவாளன் யெந்தன் புருஷனும்
சும்மா யிருத்தியே வைப்பானெடி 130

முல்லை யரும்புபோல் வாசமடி சிவன்
மூக்கு நுனிவழி ஏறுவாண்டி
எல்லைகடந்த சிவபெருமானையும்
எட்டு கயத்தாலே கட்டலாண்டி 131

கட்டியடிக்கலாங் கண்டத்திலே சிவன்
காத்து பிசுங்காமல் கெஞ்சுவாண்டி
சட்டித் தலை பாம்பை சூடி மேலாடிய
சார்ந்து கும்மி யடியுங்கடி 132

உச்சி வெளியான கோட்டையடி யிது
ஒம்பது வாசலும் சன்னலுண்டும்
கெச்சிதமாகவே யிருக்கலாம்
கேதார வீட்டுக்கே வாங்களடி 133

வாங்களடி யிந்த வீட்டுக்குபோகவே
வாங்குள்ளே வாயடி யேணிபாதை
நாங்கழடி யிந்த பாதயிலே அப்பன்
நஞ்சுண்ட கண்டனை கண்டோமடி 134

நஞ்சுண்ட கண்டனும் நாமள டியிங்கே
நாலெட்டும் வொன்ருக சாவுமெடி
கொஞ்சி விளையாடி விஞ்சையிலேறிய
கூத்தாடி கோலாடி காயகும்மி 135

கூத்தாடி கூத்தாடி கொண்டமெடி யிந்த
கோபுரவாசல் வழியேறி
காத்தவராயகவண்டனெடி யிவன்
கண்டத்து மண்டலம் சேர்ந்தமடி 136

சோக்தமெடி யிங்கே விந்துநாதமிது
சொல்லுக்கும் எட்டாது அச்சிமட்டம்
சந்தோசமான திடத்தினலேபற்றி
சவ்வாரி பண்ணலா் வாங்கழடி 137

## வாழி விருத்தம்.

சட்டி சுடுகாடு சோதி வாழி யிது
செல்லுக்குல் லெட்டாது வாழியடி
கட்டுப்படுமேடி கண்டத்திலே யிது
கருத்தன் கணபதி வாழி வாழி 1

சித்தரும் முத்தரும் வாழியடி மூலச்
செந்தீயை யுண்டவர் ஞானி வாழி
பறற்ர பாடினோர் வாழியடி நாமழ்
பரமன் திருவழி சத்திவாழி 2

சத்திய நீதிக்கி வாழியடி மூல
சர்குருவானவர் வாழியடி
அத்திமுகவனைவெ கண்டு பணிந்தவர்
அானடி பரமனே வாழி வாழி 3

வாசி நிலையடி வாழி வாழி பொல்லா
வமபழிந்த வீடம் வாழி வாழி
ஊசி நுனியிலே யேரிய ஞானிக்கி
உத்தமி சத்தி திருவாழி 4

முற்றுப் பெற்றது.

17/404

Printed at The Nadar Press Ltd., Siv[illegible]asi:—24.